54.ஸ்ரீ 5.8

# அன்பே கடவுள்

## (LOVE IS GOD)

திருவாரூர்

ஸ்ரீ குரு கருணையானந்த ஞானபூபதிகள்

எழதியது.

Acc. 14477
G 23

வெளியிட்டவர்கள்:

எம். ஏ. நாவலர் அண்டு சன்ஸ்,

திருவாரூர்.

ரெஜிஸ்தர் காப்பிரைட்] 1933 [விலை அணு 6

குண்டலி சத்தியின் விழிப்பு.




இந்தக் குண்டலி சத்தியின் சித்திரமானது
யோகிகளுக்கு மோட்சத்தைக் கொடுக்கும் போருட்டு
மேல்நோக்கிய வதனத்துடன் அமைந்துளது.
இதன் மஹா ரகசியம் ஞானக் களஞ்சியம்
என்னும் நூலிற் காணலாம். விலை ரு. 3.

5-2 22



திருவாரூர்—மஹான் ஸ்ரீ குரு

# கருணையானந்த ஞானபூபதிகள்

சாம்பவி நோக்காகிய இமையா நாட்டத்துடன்

நிஷ்டைகூடிய திருவுருவம்.

இமையாத நாட்டத் திருந்துணர் வாருக்
சுமையாத ஆனந்த மாம் (ஞானக்குறள்)

5.2
VIDYODAYA ANDAVAR
A. No. 4477

நூன் முகம்

"கடவுள் அன்புருவாயிருக்கிறார்; அன்பே கடவுளாவதாகிறது" என்னும் நியாயவாக்கியம் பூரணத்துக்கு ஏற்ற அத்தகைய மாண்பு பொருந்திய அன்பேகடவுள் என்னும் இந்நூலை ஓர் கருத்தை அமைத்து முறையாக எழுதப்பெற வேண்டுமென்று கருதாமலும், பலர்க்கும் உபயோகமாகு மென்று முன்னரே சிந்தித்துச் செய்யாமலும், ஓர் அன்புள்ள மாணவர் தன் அநுபவ சந்தேகங்களை நிவர்த்திக்கு மாறு பன்முறை வேண்டிக்கொண்டமையாலும்,

எங்கள் குருமூர்த்தி இராஜயோகீஸ்வர மஹான்

**ஸ்ரீகுரு கருணையானந்த ஞானபூபதிகள்**

எழுதிய கடிதங்களிற் சில பாகங்களை, ஒரு உண்மை ஞானச் சாரியர் திருவாய் மலர்ந்தருளும் அமுதமொழிகள், அவரது இருதய கமலாசனத்தில் வீற்றிருக்கும் சர்வ வியாபகக் கடவுளது திருவசனமாகக் கருதி ஒருங்கு சேர்த்து, அது பலர்க்கும், அல்லது "அன்பு" வழிச்செல்ல முயற்சித்து அதனால் வருத்தமும், களைப்பும் அடைந்துள்ள சுவானுபவி களுள் சிலர்க்கும் இவ்வாக்கியத்தொனிகள் உபயோகமாகும் பொருட்டு மேஸ்ஸர்ஸ், எம். ஏ. நாவலர் அண்டு சன்ஸ் அவர்களால் அச்சிடுவித்து வெளிப்போந்துளது.

இந்நூலை சுவானுபவ உணர்ச்சியுடையாரும், அதனைப் பெறுதற்கு விரும்பிப் பயில்வாருமன்றி, உலகானுபவத்திற் பிரவேசிக்கத் தலைப்படும் மாணவர்களும் கற்பாராயின், அஃது அவர்கட்கும் பேருபகாரமாயிருத்தலைக் கண்கூடாகக் காணலாம். ஆகலின், இந்நூல் இகபர சாதனமாகக் கருத வேண்டிய இனிய வசனங்களும், உத்தமோத்தம குணங்களும் நிறைந்துள்ளன என்பது ஊன்றியறியவல்லார் பலர்க்கும் ஒப்பாகவிளங்கும்.

இங்ஙனம்,

பாவலர் திலகம், கருணை. அஹ்மதாஸ்மணி.
கருணை. சோமசுந்தர சுவாமிகள்.

## இந்நூலாசிரியர் தமது குரு (கடவுள்) மகிமையை வியந்து துதித்தல்.

அறுசீரடியாசிரிய விருத்தம்.

நற்றவத் துறையுங் காட்டி ஞாதிரு ஞான ஞேயம்
அற்றநன் னிலையுஞ் சுட்டி யருங்கலைக் குன்றி லேற்றிக்
குற்றமுங் குணமாக் கொண்டு குளிர்பதஞ் சிரமேல் வைத்த
சற்குரு பாதப் போதைச் சந்ததஞ் சிந்தை செய்வாம்.

(மற்றுப்பற்றெனக் கின்றிநின் றிரு என்ற தேவாரப்பண் மெட்டு.)

இராகம்—தேசிகதோடி, தாளம்—நபகம்.

அன்பிலுலுனே யன்பர்காணுவர் அன்பிலா வடியேனுனே [ஞ
என்புதோனிறை யாக்கையீதுகொண் டெவ்விதத்தினிற் காண்ப
முன்பதாகவென் னன்பில்வந்து மூளைத்தகாரணக் கொண்டலே
நின்பதாம்புயத் நின்பமேலும் நீதனேகுரு நாதனே 1

அறிவுநாமென வறிந்திடாதவர்க் கல்லவாவிரு வினைகடான்
தறியெனநின்று கதிபெருவகை தடுக்குமீதுண்மை யாகலின்
பொறியுநீயல்ல புந்திநீயல்ல பூதநீயல்ல வென்றெனை
நெறியிலேகிடும் முறையுணர்த்திய நீதனேகுரு நாதனே 2

தன்மமைந்தனே நினைவறிவெனத் தானிரண்டு வகைப்படும்
மன்னுமாபர நினைவதென்னவும் வருமுயிர்நினை வென்னவும்
பன்னுவார்பர நினைவுதான்சக முயிர்நினைவதைப் பற்றிடும்
நின்மலாவென வென்னுனோதிய நீதனேகுரு நாதனே 3

ஞேயனாதுரு ஞானமூன்றென நின்றிடிற்பிர பஞ்சமாம்
தாயனேயது விதுவெனச்சொலுஞ் சுட்டிலாதது முத்தியாம்
ஆயவிவ்விரண் டோர்ந்துகொண்டபின் அறிவெனும்பரப் பிரம்மநீ
நீயிரண்டெனும் பேதநீங்கென்ற நீதனேகுரு நாதனே 4

என்னுருவென விந்தப்பூத சரீரமானதை யெண்ணியே
தன்னுருவினி னுண்மைகாணருஞ் சமயமீதில்நின் குக்குமப்
பொன்னுருக்கொடு போந்துணர்த்திய புண்ணியாவடி யேனையும்
நின்னுருக்கொடு நிற்கவைத்தொளிர் நீதனேகுரு நாதனே 5

சோதியாகிய பிரம்மமீயெனச் சொல்லிமேற் றுறை காட்டியும்
பாதியாமுழுச் சந்திரன்றரும் பாலையுண்ணும் வகையுடன்
ஓதியமறை யுள்குமோரெழுத் துண்மையின்னதென் றென்னுளே
நீதியாக்திரு வீதிகாட்டிய நீதனேகுரு நாதனே 6

தாயினுண்மைச் சொலூபரூபந் தனேயறிவது முற்கடன்
சேயவன்தரும் பாலினுண்மை தெரிக்தருக்துதல் பிற்கடன்
மாயபாச தரங்கமோது மகோததிதணந் தொன்றென
நீயலாலெனக் கார்கவிலுவர் நீதனேகுரு நாதனே 7

பிறிவிலாதவென் னருமைமைந்தனே பேசுவேனொரு ரகசியம்
அறிவுதன்மன நினேவிலேகலந் தசையுமேற்சக முயிர்ப்பரம்
செறியுமவ்வறி வின்னினேவதைச் சேர்ந்திடாவணஞ் செய்துவா
நிறைதல்நிச்சய மெனநிகழ்த்திய நீதனேகுரு நாதனே 8

நோக்கிலாவொரு நோக்கிலேபினே நோக்கியேபர மானந்தக்
தாக்கமேவரு மாறுசெய்துபின் றாங்கிடாதினித் தாங்கெனச்
சூக்குமச்சடங் கொண்டுசொன்னதைச் சொப்பனத்து மறப்பனே
நீக்கமின்றியென் யாக்கையுள்வளர் நீதனேகுரு நாதனே 9

முத்தியென்ற னிராசையேயன்றி மோட்சம்வேறிலே யென்றுபின்
கத்தியேதொழுங் கருணையானந்த ஞானபூபதி கற்றமிழ்
பத்தையும்பர மானந்தவருட் பாடலென்றுளங் கொண்டனே
நித்தியானந்த அத்துவைதனன் னீதனேகுரு நாதனே 10



# பொன்மொழிகள் பதிலுரை.

1. எல்லாவற்றிலும் முதன்மையானது எது? அது 'கடவுள்' எவ்வாறெனில் அவர் எக்காலத்தும் உள்ளவர். "ஆதி பகவன் முதற்றே யுலகு" (திருக்குறள்.)

2. எல்லாவற்றிலும் அழகுள்ளது எது? அது "உலகம்" எவ்வாறெனில், அது கடவுளின் அமைப்பு. உலகத்தை தத்துவ மாகக் காண்பார் அறிவுடையோர்.

3. எல்லாவற்றிலும் மிகப் பெரியது எது? அது 'ஆகாயம்' எனெனில், அது சகல சிருட்டிப் பெருள்களையும் தன்னிடத்தில் அடக்கிக்கொண்டிருப்பது.

4. எல்லாவற்றிலும் நீலையுள்ளது எது? அது "ஆன்மா" எனெனில், அது எப்பொழுதும் அழிவற்றது; நிலைத்து நிற்பது.

5. எல்லாவற்றிலும் சிறந்த தானம் எது? அது 'நிதானம்' எனெனில், நிதானமில்லாமல் என்ன தானம் செய்தாலும் பயன் படாது.

6. எல்லாவற்றிலும் உத்தமமானநேறி எது? அது 'அறநேறி' எனெனில், ஈந்த மதமும் அறநெறியையே தழுவும் "அறஞ்செய விரும்பு" என்பது ஆத்திசூடி.

7. எல்லாவற்றிலும் அதிக விரைவுள்ளது எது? அது 'மனோவாவம்" எனெனில், அது ஒரு வினாடிக்குள் உலகமுழுவதும் சுற்றி வந்துவிடும். "ஒரு கணத்தில் பல உலகாய் உதிக்கும்" என்பது (கைவல்லியம்.)

8. எல்லாவற்றிலும் சிறந்த சிருட்டி தேவர்களா? மனிதர்களா? அது 'மனிதர்கள்' எனெனில், தேவர்களும் மனிததேகத்தினூலேயே முத்தியடையக் கூடியது.

9. எல்லாவற்றிலும் வல்லமையுள்ளது எது? அது 'விதி' எனெனில் ஒருவன் தன் புத்தி சாதுரியத்தால் எவ்வாறு நடந்து கொண்டபோதிலும் விதியை அனுசரித்தே நிற்கும். "ஊழிற் பெருவலி யாவுள, மற்றொன்று சூழினும் தான்முந் துறும்"(குறள்)

10. எல்லாவற்றிலும் எளியது எது? அரியது எது? பிறர்க்குப் புத்திபோதித்தல் மிக எளியது அவ்வாறு தான் நடந்து காட்டுதல் மிக அரியது

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாஞ்
சொல்லிய வண்ணம் செயல். (குறள்.)

11. எல்லாவற்றிலும் அடங்காதது எது? அது "மனம்" எனெனில் "இந்தையை அடக்கியே சும்மாவிருக்கின்ற திறமிது" (தாயுமானர்) 'மனக்குரங்கை கட்டிவைத்தாலும் காட்டும் பல்லை' (குணங்குடியார்)

12. எல்லாவற்றிலும் அவசியம் அறியவேண்டியது எது? "தன்னை" எனெனில் "தன்னையறிந்தவனே தலைவனை யறிவான்" தன்னை யறிந்தருளே தாரகமாய் நிற்பதுவே யுன்னையறிதற் குபாயம்" (தாயுமானர்)

கருணைநிதி கருணைழல்னிற்க.

ஸ்ரீல்ஸ்ரீ கருணையானந்த ஞானபூபதிகள்

திருவாய்மலர்ந்தருளிய

# அன்பே கடவுள்.

## கடவுள் வணக்கம்.

எழுசீரடியாசிரிய விருத்தம்.

இருவிழி யிடையி னடமிடும் பொருளி யிட்டதே வதையையெற் கிசைந்த
குருமனுன் மணியைக் கருணையங் கடலைக் கோடிசூ ரியனிகர்தேவ
தருவென வழங்கும் வள்ளலைச் சற் சதோதய சிற்சுகா ரம்பப்
பரவெளி யதனில் வளர்தனிமுதலைப் பணிந்திந்நு னுணிந்திவண் பகர்வாம்.

## அன்பின் மகிமை.

அறுசீரடியாசிரிய விருத்தம்.

அன்பே கடவுள் திருவுருவம் அதில்யா தொருசந் தேகமிலை
அன்பே தன்னை யறிவிக்கும் அன்பே தலைவன் றனைக்காட்டும்
அன்பே சகல சித்திமுத்தி அன்பே ஆன்ம ஞானவுயிர்
அன்பின் மகிமை வழியறியா ரவர்க்கிங் கொன்றும் பலியாதே.

## அன்பின் நிலை.

அன்பு என்பது பக்தி, விசுவாசம், காதல், நேசம், நம்பிக்கை, ஆசை, தயை என்று சொல்லத்தகும். நாயகன் நாயகிகளுக்கிடையில் பிரகாசிக்கும் அன்பிற்கு காதல் என்றும்; நண்பர் உறவினர்களுக்கிடையில் உண்டாகும் அன்பிற்கு நேசமென்றும்; அநாதைகள், மிருகம், பட்சி முதலான பிராணிகள் மீதுண்டாகும் அன்பிற்கு தயை, காருணியம், கிருபையென்றும்; குருபிரான்மீதும், கடவுள்மீதும் உண்டாகும் அன்பிற்கு

பக்தியென்றும் பெயர். பக்தியென்பதின் திரண்ட பதம் அன்பினுடைய ஆரம்பத்தையே குறிக்கும்.

பக்திவிலாசத்தின் முதிர்ச்சியாகிய அன்பானது பூரண நம்பிக்கை விசுவாசத்துடன் கடவுளைத் தெரிசித்து, அவருடன் இரண்டறக் கலத்தலாகிய சீவப்பிரம்ம ஐக்கியம் அடையும்பொருட்டு, தியானசொரூபமாகப் புரியும் அரியபெரிய முயற்சியாம். அத்தகைய முயற்சியானது தைலதாரை போல் இடைவிடாமல் கடவுளைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்குமாகில், சகலபாசபந்தங்களும் நிவர்த்தியாகி, நிராசையாகிய மோட்சமடைவதற்கு ஏற்ற சாதனமாகும்.

## அன்பின் முத்திறம்.

அன்பானது *தலையன்பு, இடையன்பு, கடையன்பு* என மூவகைத்தாகும்.

**தலையன்பு:**—கடவுளுக்காகத் தன் உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம்பண்ணித் தனக்கென்று வைத்துக் கொள்ளாதவர்களும், அன்பின்வடிவாக அவதரித்து அன்பிற்கையைந்த ஆரிபுநாயகம் சுல்தான் செய்யிதுஅஹ்மது கபீநர்றபாயி அவர்களும், கண்ணிடந்தப்பிய கண்ணப்ப நாயனாரும், அதுபோன்ற செய்கையுடையவர்களும், சதா அன்பிற் கரைந்துருகுபவர்களும், நாயகன் காட்டில் ஒரு

---

* "அன்பே கடவுள்" இஷ்டே தாந் என்பது சரிதானா? என்று சில சந்தேகிகளுக்குச் சந்தேகந் தோன்றுமானால், குணங்குடியார் "கண்ணேறகுமானே" என்றதற்குப் பொருள் தெரிந்தால் இதற்கும் பொருள்விளங்கும். இதனையே திருமூலரும்;

அன்பு சிவமென் றிரண்டென்ப றறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருப் பாரே!

எனக் கூறியுள்ளார்.

கொடிய புலியடித்து உயிர்நீங்கினனென்று கேட்டமாத்திரத்தில் தன்னையறியாமலே வெய்துயிர்த்துத், தன்னுயிரையிழக்கின்ற நாயகியும் தலைமையான (முதற்றர) அன்புள்ளவர்கள்.

இடையன்பு:—கடவுள் வழியில் தான தருமங்களைச் செய்ய முயலும்போது, சில பாகத்தைத் தனக்காக ஒதுக்கிக்கொண்டு, பல பாகத்தைச் செலவிடுபவர்களும், தமக்கு அன்பான ஒரு வஸ்துவை நேரிற்காணுங் காலத்தும், ஒருவர் பாடும்போதாவது, ஒரு நூலைப் பார்க்கும்போதாவது, அதன் சாரத்தையுணர்ந்து கண்ணீர்விடுபவர்களும், நாயகன் உயிர்நீத்தபின் உடன்கட்டையேறுகின்ற நாயகியும் (நடுத்தரமான) இடையன்புள்ளவர்கள்.

கடையன்பு:—கடவுள் வழியில் புண்ணியஞ்செய்ய முயலும்போது பல பாகத்தைத் தனக்கென ஒதுக்கிக் கொண்டு, சில பாகத்தை மாத்திரம் செலவு செய்பவர்களும், தனது அன்பிற்குரிய வஸ்துவுடன் நெடுநாட் பழகியபின்னர் அன்புதயமாகுபவர்களும், நாயகன் மரித்தபின்னர் அவனை நினைந்து நினைந்து சில சமயங்களில் கண்ணீர்விடுகின்ற நாயகியும் கடையன்புடையவர்கள்.

அன்பில் தலையன்பு, இடையன்பு, கடையன்பு என்று கூறியதைப்போலவே, அன்பில் சத்துவகுணஅன்பென்றும் இராசோகுண அன்பென்றும், தாமாகுண அன்பென்றும் மூவகைத்தாகும்.

சத்துவகுண அன்பு:—இந்தச் சத்துவகுண அன்பிலீடுபட்டவர்கள்; தாம் கடவுள்மீது அன்புசெலுத்துவதைப் பிறர் அறியவேண்டுமென்ற விருப்பமின்றி, வெகு இரகசியமாகத் தன் மனதுக்குமட்டும் தெரிந்தவண்ணமாக அன்பு செலுத்துவார்கள். சாதி, மதம். பிறப்பு, குலம், கோத்திரம் என்பதை எவரிடத்திலும் ஆராயமாட்டார்கள். ஆடம்பரச்செலவு செய்யமாட்டார்கள். அவரவர்கள் மதக்

கோட்பாட்டின்படிக்குள்ள சின்னங்களை அணிந்துதான் நீரவேண்டுமென்று விரும்பமாட்டார்கள். பகிரங்கமாக ஒன்றையும் செய்துகொள்ள விரும்பாமல் எப்பொழுதும் கடவுள் சிந்தனையே மேற்கொண்டிருப்பார்கள்.

இதற்கு எதிர்மறையாக அலங்கார தூப தீப நைவேத்தியாதிகளைச் செய்ய முயல்பவர்களும், மது மாமிச பட்சணங்களை வைத்து நிவேதிப்பவர்களும் முறையே இரசோகுண தமோகுண அன்புசெலுத்துபவர்களேயாம்.

## அன்பே உயிர்.

(1) தாகமுடையவன் தண்ணீரை விரும்புவதுபோல், ஆன்மலாப தாகமுடையவர்கள் அன்பென்னும் பிரவாகத்தையே விரைந்து விரும்புவார்கள். அன்பிற்கு மேலான மார்க்கம் எக்காலத்திலும் இல்லை. அன்பு ஒன்றே உயிருக்கு ஆதாரமாயுளது. அன்பின் மூலமாகவே உயிர் நிற்கிறது. ஆதலால் அன்பே உயிர்! அன்பே உயிர் நிலை!

(2) அத்தகைய அன்பின் வழியாய் கடவுள்மீது பூரணமாக அன்பு செலுத்துபவர்கள் வீண் விவகாரங்கட்கெல்லாம் செவிசாய்க்காமல், தன்னுடைய இருதய மூர்த்தியின்மீது சதா சிந்தனைபுடைபவர்களாயிருப்பார்கள். தனது இருதய கமலாசனத்தில் வீற்றிருக்கும் *பரமாகாய அரூபரூப மூர்த்தியின் மீது நிட்காமியமாக அன்பு செலுத்துபவர்களே பூரண ஆனந்த முடையவர்கள். அவர்கள் வாழ்வு வந்தாலும் மகிழ்ந்து துள்ளாமல், தாழ்வு வந்தாலும் சலித்துக்கொள்ளாமல், எப்போதும் மலர்ந்த முகத்துடன் பிரகாசித்துக்கொண்டிருப்பார்கள். ஆகையால் அவ்வாறு நீ நடந்து கொள்ள ஆசைப்படு.

மலர்ந்த முகமே வாழ்க்கையின் இன்பம்

---

* இந்தப் பரமாகாயத்தின் இரகசியமும், அதன் இடமும் படத்தின் மூலமாக மகான் ஞானக் களஞ்சியத்தில் விளக்கப்பெற்றிருப்பதால் அந்நூலைப்பார்த்தறிக.

(3) அன்பின் வழியாகவே கடவுளின் சமீபத்தை அல்லது தெய்வ சந்நிதியை உணருகிறோம். இதற்கே சாமீபபதம் என்று கூறுவது. அன்பு கடவுளையும், மனிதனையும் ஒன்றுபடுத்துகிறது. பூரண உள்ளமும், நம் மூர்த்திகரத்திற்காகக்கொண்ட ஒன்றைக்குறிப்பிட்ட அன்பும் எழும்போது, அது ஓர் வெள்ளமாய் வந்து, அறியாமை, உலோபம் (கிருபணத்துவம்) பயம், சந்தேகம், சுயநலம் இத்தன்மையான ஒவ்வொன்றையும் அடியோடு கழுவிவிடுகிறது. ஆனால், அதனால் அங்கு விட்டுவைக்கப்பட்டதென்ன? உன் இஷ்ட மூர்த்தியேயாம். உன்னுள்ளத்தில் பிரகாசித்துக்கொண்டிருக்கிற அந்த மூர்த்திவடிவ மாத்திரமே விட்டுவைக்கப்பட்டிருக்கிறது. பிறகே உலகசம்பந்தமான எதையுந் தள்ளிநிற்கச் சுலபமாகிறது. ஏனெனில் உன் அன்புரிமைகொண்ட அவரையன்றி, உன் மதிப்பிற்குரியது யாதொன்றுமில்லை. அவர் ஆதியந்த மற்றவர்; நித்தியத்துவமுள்ளவர்; மாறுபடாதவர்; அவர் சோதிமயமான சித்து. ஏனையவெல்லாம் அழியத்தகுந்த சடம். மற்றபொருள்களெல்லாம் நிலையில்லாதன, மாறுதலுடையன.

(4) அன்புடைமையும் பயபக்தியும் உண்மையில் எத்தகைய அரும்பெருங் காரியம். அன்பு ஒன்று மாத்திரமே ஒருவனை ஆனந்தபுருடனாக ஆக்கக்கூடும். தலையன்பானது மகாமகிமையும் வல்லமையும் பொருந்தியது. அத்தகைய பேரன்பின் மகிமையால் ஒருவன் தூலிலிருந்தும், கல்லிலிருந்தும் கடவுளின் வல்லபத்தை வெளிப்படுத்துகிறான். பிரசாதத்திற்கும் உயிரளிக்கும் வன்மையைப் பெறுகிறான். இதற்கிணங்க மன்சூர் ஹல்லாஜ் என்பவரும், நாகூர் ஆண்டவரும் உயிரளித்திருக்கின்றனர். இங்கு கண்ணப்பர், பிரகலாதர், மார்க்கண்டேயர் முதலானவர்கள் சரிதமும் தெய்வீகத்தை வெளிப்படுத்துவதில் சான்று பகர்கிறது.

அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு.

(5) அன்பின் வழியே சாலச் சிறந்தது. அன்பு ஒன்றே அகத்தோற்றமாகிய நிரதிசயானந்தத்தை விளைவிக்கும். அன்பிற்குமேலான முத்திமார்க்கம் எக்காலத்திலும் இல்லை. அன்பிற் கரைந்து கரைந்து கண்ணருவிகாட்டி, உன் இருதய (அரூப) மூர்த்தியை ஆராதனைசெய். சிறு குழந்தையைப்போல் பேதாபேதம் நீங்கிய களங்கமற்ற இருதயத்தினால் அன்புசெலுத்து. இருதயசுத்த மில்லாத வரையில் கடவுள்காட்சியை நீ காணமாட்டாய். அன்பென்னும் ஒரேயொரு வலியிலேதான் கடவுள் சிக்கிக்கொள்வார் கடவுள் பந்தபாசங்களிற் கட்டுப்படாதவராக இருந்தும். என்னுடைய அன்பர்களால் நான் கட்டுப்பட்டிருக்கிறேன் என்று கூறியிருக்கிறார். ஆதலால், அன்பின் மூலமாக இருதயத்தில் கடவுள் ஆராதனை செய்கிறவர்களே மிக்க ஆனந்தமுடையவர்கள். அவ்வாராதனை மாத்திரமே உண்மையுள்ளது. தெய்வீக பிராணசக்தியோடு பரிசுத்தமாக வாழ். இதில் அச்சமற்று தைரியமாய் நில். உனதுமுன் ஆபிரக்கணைக்கான சித்தசலனங்கள் வந்து தாக்கினாலும், அவைகளை இலட்சியங்கொள்ளாதே; இன்னும் அழுத்தமாக நில். ஒருபொழுதும் பின்வாங்காதே. கடவுளைக்குறித்து இவ்விதம் நிரந்தர அன்பு செலுத்துபவர்களே சதானந்திகள்.

(6) ஒரு மனிதன் அன்பென்னும் வழிகாட்டியின் மூலமாகவே கருணையங்கடலாகிய கடவுளின் தெய்வீக சந்நிதானத்தை உள்ளபடி காதலாமகம்போல் கண்குளிர முடியும். அத்தகைய அன்பின் மகிமையானது நாயகி நாயக பாவத்தினால், பிரிந்துகொண்ட மாதா பிதாக்களின் பிள்ளைக் குழந்தையானது தனது இனிய மழலைச்சொற்களால் அம்மா! அப்பா! என்று அழைத்து, இருவர் மடியிலும் தவழ்ந்து ஒன்றுசேர்ப்பதுபோல், அந்தக்கரை ஆபாசத்தால் கடவுள்சமூகத்தைக் கிட்டமுடியாத மனிதனை அன்பென்னும் அருட்குழந்தையானது, தனது வல்லபத்தால் தன்னை அபிமானிக்கிற காரணத்தை முன்னிட்டு, அவனது அந்தக்கரணங்களைப் பரிசுத்தஞ்செய்து, அந்த

மனிதனையும், கடவுளையும் சீவப்பிரமைக்கியமென்னும் சாயுச்சியபதவியில் ஒன்றுசேர்க்கிறது. இவ்விதமாக மனிதனும், கடவுளும் அபின்னமாக ஒன்றுசேர்வதைத்தான் ஆன்றோர்கள் *சன்மார்க்கநிலையென்று கூறியிருக்கின்றனர்.

(7) கடவுளின் சமுகத்தைக் காணுவதற்கு அந்தக்கரணங்களென்னும் இருட்படலமாகிய காசரோகம் ஒவ்வொரு மனிதர்களுடைய ஞானக்கண்ணையும் மறைத்துக்கொண்டிருப்பதால், நிட்காமியமாகிய உண்மையான அன்பென்னும் அருமருந்தினால் பிரகாசிக்கச்செய்து அவரது தெரிசனத்தை ஞானக்கண்ணுற்காண முயற்சிசெய். அன்பில்லாமல் வேறெவ்விதமான அரும்பெருங்கிரியைகளானும், நானாவித யோகப்பயிற்சிகளினாலும், மந்திரசக்தியினாலும், ஏனைய புறக்கருமங்களினாலும் ஒருபோதும் அவரது சமுகத்தைச் சேரமுடியாது. கடவுளானவர் அன்புவடிவாயிருக்கிறார். அன்பானது கடவுள் வடிவமாயிருக்கிறது. ஆதலால்; "அன்பே கடவுள்" என்று கூறுவதில் ஐயம் யாதுளது? அன்பென்னும் நன்னெறியில் பரவசமுற்று, வைராக்யமாயிருப்பவர்களே சதானந்த மூடையவர்கள். இதர நெறியினால் இருதய மூர்த்தியைத் தெரிசிக்க விரும்பியவர்கள், சூரியனைக் காண்பதற்கு இருளைத் துணையாக அழைத்துச் சென்றவர்களே நிகர்ப்பார்கள்.

---

* சன்மார்க்கம், சகசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், தாதமார்க்கம் என நான்கு மார்க்கங்கள். இவற்றுள், சன்மார்க்கமாவது, "நீயே நான், நானே நீ" என்னும் அத்துவிதமாபாவனை. சகசமார்க்கமாவது, தோழனுந் தோழனும் போன்றிருத்தல். சற்புத்திரமார்க்கமாவது, தந்தையும் தனயனும் போன்று சேவித்தல். தாதமார்க்கமாவது ஆண்டானும் அடியானும்போன்றிருத்தல்.

தாதமார்க்கம் சரியையெறி. சற்புத்திரமார்க்கம் கிரியையெறி. சகசமார்க்கம் யோகநெறி. சன்மார்க்கம் ஞானநெறி. இதன் முழுவிபரம் நமது வேதாந்த பால்கரன் ஞானசோபான அத்தியாயத்திற் காண்க.

(8) நம்பிக்கை, உண்மையும் பரிசுத்தமுமான அன்பு, அவ்வன்புமேலீட்டால் எழுந்த அச்சம், நிட்காமியம் என்னும் வல்லபத்தின் மார்க்கமாக வெகு எளிதில் இருதய மூர்த்தியை அடையலாமேயன்றி நியாய பரீட்சாவல்லபங்களினால் ஒரு பொழுதும் கடவுளைத் தரிசிக்க முடியாது. எனென்றால் இதனை உள்ளபடி அநுபவித்துணர்தல் மிக்க கடினம். ஆனால் வஞ்சகமற்ற இருதய அநுபவத்தால் உணரலாம். சுயப்பிரயோசனத்தைக் கருதிய அற்பவிருப்பமும் எவ்வளவுகாலம் நம்மிட மிருக்கின்றதோ, அவ்வளவுகாலம் நாமதனைப் பெறலாமென்று எதிர்பார்க்க முடியாது. அது தெய்வீகமும், பரித்துவமும் உடையதென்பது ஊன்றியறிய வல்லார் பலர்க்கும் தெற்றென விளங்காமலும் போகாது.

தாயுமான வள்ளல்.

அன்பருக் கன்பான மெய்யன்—ஐயன்
அனந்த மோனன் அருட்குரு நாதன்
தன்பாதஞ் சென்னியில் வைத்தான்—என்னைத்
தானறிந் தேன்மனந் தானிறந் தேனே

என்று திருவாய் மலர்ந்த அமிர்தவாக்கியத்திற் கிணங்க, மெய்யன்பு செலுத்துபவர்களே உண்மையான நல்வழியில் நடப்பவர்கள். மற்றவர்கள் கங்காநதியைத் தரிசிக்கவிரும்பி அதற்கு மாறுதிசையை நோக்கிச் செல்பவர்களே நிகர்த்தவர்கள்.

(9) ஆன்றோர்களாகிய தத்துவஞானிகள் யோக ஞானங்களைப் பார்க்கிலும் அன்பு ஒன்றையே மிகப்புகழ்ந்து தத்தம் நூற்களில் வெளியிட்டிருக்கின்றனர். பேரின்ப மஹான்களெல்லாம், அன்பின் பெருமையை விஸ்தரித்துக் கூறியிருப்பதுபோல், சரியை, கிரியை, யோகங்களைப்பற்றி, அவ்வளவு விசேடமாய்க் கூறவில்லை. அவர்கள் அதோடு நின்றுவிடாமல் சரியை கிரியைகளைப் பற்றி இகழ்ச்சி

BOOK AND...
14477
...LIBRARY, KOVILOOR

## பக்தி விலாசம்.

தோன்றும்படியாகப் பின்வருமாறு ஏன் கூறியுள்ளார்கள் என்பதை ஆராய்ந்துபார்ப்பது மிகையன்று.

### சிவஞானவள்ளல்.

சரியைகிரி யாயோக சங்கடத்தை மாற்றி
ஒருஞானப் பேறளித்த வுன்னை, எனவும்,

அறிவுநா மென்றறிய மாட்டாதா ரன்றே
எறிகால் புனலருந்தி யென்றும்—தறிபோலும்
நிட்டையுடன் மட்டாய் நெடுங்காலம் நின்றார்கள்
ஈட்டமலா லுண்டோ நயம் எனவும்,

### சரியை.

முலைமுதிராப் பெண்ணை முயங்கவந்த இன்பும்
எலிகவர வெற்பகழ்ந்த எல்புங்—கலியிலான்
கற்றவரோ டோடக் காதலித்த வாறுமே
உற்ற சரிதையினுக் கொப்பு எனவும்,

தன்னைச் சடவடிவில் தங்கநினைத் தாவாகித்
தன்னியமாய்க் கண்டங் கருச்சிக்கும்—பின்னருக்கும்
இன்பமிலே வேலை இடையொடியு மானமையால்
இன்பமெலாம் ஞானிக்கே யெண் எனவும்,

### யோகம்.

தத்துவக்கற் றற்றுவெறுந் தானேதா னாய்நின்ற
முத்தருக்கு யோகமேன் மோனமேன்—வெற்றியேன்
சுத்தசுக நித்தியமாய்ச் சும்மா விருப்பதுவே
பற்றற்ற முத்தியெனப் பார் எனவும்,

பால்வீதி பூசையாய்ப் பழவீதி பைங்கிளியாய்க்
கால்வீதி பாம்பாதல் கட்டுரையே—நோல்வீத
மாண்டவிடம் முத்தியென்றுன் மாணு வீரதமெல்லாங்
கூண்டோடே வெட்டிக் குமை எனவும்,

கவீஞுடைய வள்ளல்.

சும்மா இருக்கவைத்த குத்திரமாஞ் சாத்திரத்தை
வீம்மாக் கதமுவதும் வேலகளும்—தம்மறிவால்
நீட்டிப் பிடித்திருக்கும் நிட்டைகளும் ஞானிகள்முன்
காட்டும் பரியாச கம் எனவும்,

வேட்டியுந் தாழ்வடமும் வெண்ணீறும் வெண்பல்லும்
காட்டுவது ஞானக் களவுகாண்—தேட்டமற்றோன்
பூரணண்காண் சிற்றறிவன் பொய்ப்பாச மென்றறிந்தார்க்
கோர்வடிவும் வார்த்தையுமுண் டோ எனவும்,

அருணகிரியார்

தருத்தி யெனும்படி கும்பித்து வாயுவைச் சுற்றிமுறித்
தருத்தி யுடம்பை வருத்தி லென்னும் எனவும்,

திருவாய் மலர்ந்திருக்கின்றார்கள்.

இங்ஙனம் இகழ்ந்து கூறியது சரியை கிரியை யோகங்களை அனுஷ்டிக்கப்படாதென்றல்ல. அன்பின் பெருமையை விஸ்தரிப்பதற்காகவே அங்ஙனங் கூறியிருக்கிறார்கள். அதற்காக, நீ சரியை கிரியைகளைக் கைவிட்டுவிடக் கூடாது. ஏன்? சரியை மார்க்கத்தையே சரிவர அநுட்டிக்கமுடியாத நீ அதையும் கைவிட்டுவிட்டு மேற்பூமியாகிய யோக, ஞானங்களை அநுட்டிப்பது எவ்வாறு முடியும்?

(10) திரண்ட செல்வவான்கள் தமது பணங்களைச் சேமித்துவைக்கும் பொருட்டு ஆயிரம் பதினாயிரம் ரூபாய்களை பாங்கு (Bank) முதலிய விடங்களில் கொடுத்துவைப்பதன்றி, ஓர் பத்து ரூபாயைப் பத்திரப்படுத்த முயலார்கள். ஏனெனில், அந்தப் பத்து ரூபாய் அந்தப் பிரபுக்களுக்கு ஓர் திரணமாகத் தோற்றும். ஏழைகளுக்கோ பத்து ரூபாய் சேர்த்துவிட்டால் அந்த ரூபாய்களை தெய்வம்போல் எண்ணி விருத்திசெய்வதிலேயே கருத்தாயிருப்பார்கள். அதுபோல், அகண்டாகார பேரின்ப வெள்ளமானது பொங்கித் ததும்பிப் பூரணமாய் எவ்வுருவாய்க் கிடக்க

அதைப்பெற்ற மஹான்கள் அவ்வளவு அதிகமல்லாத சிறிய அருளே இகழ்வார்கள். அதற்காக நீ, நல்லபாம்பு ஆடுவதின் முன் நாக்குப்பூச்சியும் ஆடத்தொடங்கியதுபோல் பெரியோர்கள் ஏற்படுத்திய ஏணிய மார்க்கங்களே இகழுயலாதே.

திருமந்திரம்.

எப்பரி சாயினும் ஈசனைப் போற்றுமின்
அப்பரி சீசன் அருள்புரி வானே

என்னும் திருமந்திர வாக்கையும் அங்கீகரித்து நடந்து கொள். சரியை கிரியை யோகங்களைப்பற்றி மஹான்களே இகழ்ந்திருக்கும்போது, நாமென் அவற்றை அநுஷ்டிக்க வேண்டும் என்று சிறுபிள்ளைத்தனமாக எண்ணுவாயாகில், மரமேறி மிதிகொம்பையும், பிடிகொம்பையும் விட்டவர்கள் கதிபோல் ஆகிவிடுவாய்; ஜாக்கிரதை.

ஒழிவிலொடுக்கம்.

ஆனை மதப்பட்டால் அலங்காரம் அன்றிநாய்
தானு மதப்பட்டாற் சரியாமோ—ஞானி
தடைமீறி ஞலும் சதிராகுங் கன்மி
கடைமீற லாகாது காண்

என்று கூறியிருக்கிறது. சரியை கிரியை யோகங்களானது பைசா, அணு,ரூபாயைப்போல் சாமானியமாகவும்,ஞானம், அன்பு இவைகள் தங்கம், இரத்தினங்களைப்போல் பெருமையாகவும் மதிக்கப்பெறுகிறது. அதனால், பைசா, அணு போன்றவைகளைச் சப்பாதிக்க வேண்டாமென்று கூறவில்லை. அன்றியும் பக்திமார்க்கத்திற்கும் ஞானமார்க்கத்திற்கும் அதிக தாரதம்மியமுங் கிடையாது.

(11) பூரண பக்தியில்லாதவனுக்கு ஞான நிஷ்டை கிடையாதே யன்றி, பூரண ஞானமில்லாதவனுக்கு பக்தி மார்க்கம் கிடையாதென்று சொல்வதற்கில்லை. ஞானியானவன் பக்தியைத் துணைக்கருவியாக விரும்புகிறான். பக்தனானவன் அன்பு ஒன்றையே கருவியென்னும் பற்றுக்

கோடாகவும், பிரயோசனமாகவும் கருதுகிறான். இவ்விதமான அன்பு எழும்போது உலகக் கட்டிலிருந்தும் விடுதலையடைகிறான். அது மிகக் கஷ்டமாயிருந்தற்காக நாம் நமது நம்பிக்கையை இழத்தல் கூடாது. உலகத்தின் நிலைமையான குறிப்பிலிருந்து உண்மையாயுள்ள நமது இருதய மூர்த்தி (குறிப்பு) அநுபவத்தில் எவ்வளவு கஷ்டமாயிருந்தாலும், இன்னும் அது அநுபவித்தே அறியப்படுதல் வேண்டும். இதுவே நம்முடைய ஆன்மா. இது ஒன்று மாத்திரமே உலகத்தில் உண்மை. தெளிவான உண்மைப் பக்தியுடைய ஒருவனுக்கு இது கொஞ்சமும் கடினமல்ல. ஏனெனில் அவன் இருதயம் அன்புருவமாயிருப்பதால் அது சுபாவத்திலேயே கடவுளிடம் பெருகி ஓடுகிறது.

(12) கிரியை, யோகம் முதலியவைகளில் தவறியவர்கள், திரும்ப அதில் முயற்சிக்க முடியாதாதலால் அவர்கள் பக்தி மார்க்கத்தின் வழியாகவே செல்லவேண்டும். பக்தியானது எவ்விதத்தும் தவறும்படி செய்யாது. யோகம், பக்தி இவைகளுக்கு முறையே கற்பிளவையும் தண்ணீர்ப்பிளவையும் உவமானமாகக் கூறலாம். உனது இருதயத்தில் பூரணமான பேரன்பு பிரகாசிக்கும்போது, பிரபஞ்சமாகிய மாயை வலை யென்னும் பந்தத்திலிருந்து விடுவிக்கப்பெறுவாய். ஆனால் முதன்முதல் அன்பு செலுத்துவது உனக்கு கடினமாகத் தோன்றினாலும் தோன்றும். அதற்காக நம்பிக்கையையும் முயற்சியையும் கைவிடாதே. தைலதாரைபோல் இடைவிடாத அன்பைச் செலுத்து. சமீபகாலத்தில் ஆனந்தத்தைப் பிரத்தியட்சமாகப் பெறுவாய். அப்படி இடைவிடாத அன்பு செலுத்துபவர்களோ மிகச்சொற்பம். அஞ்ஞானிகள் தனியாசை, யோனியாசை, திரவிய ஆசை யென்னும் கடனுத்திரயங்களையே மோட்ச சாதனமாகக் கருதிப் பேராசைப் பேய் பிடித்து ஞானமார்க்கத்தைக் கிஞ்சித்தும் கனவிலேனும் சிந்திக்காமல், அலட்சியமாகவும், பராமுகமாகவும் இருப்பார்கள். மெய்ஞ்ஞானிகளோ பேரின்ப மொன்றையே அரும்பெரும் பொருளாக மதித்து

அதையே சதா சிந்தித்து முயற்சித்துப் பிரபஞ்சத்தை, வாந்தி பண்ணிய சோற்றைவெறுப்பதுபோல் அருவருத்திருப்பார்கள்.

(13) ஒரு அழகிய மடமங்கையானவள் ஒரு ஆடவனை விரும்பியதாகத் தெரிந்தால், அந்த வாலிபன் மற்றொரு முறை அவ்வனிதையைச் சந்திக்கும்வரையிலாவது அல்லது அவளை ஆலிங்கனம் பண்ணும்வரையிலாவது ஊணுறக்கத்தை வெறுத்து அதே தியானமாக இருப்பானென்பது ஒவ்வொரு போகிகட்கும் தெற்றென விளங்கும். அத்தகைய பேரவாவை ஒரு மனிதன் நூறு பங்காக்கி அதில் ஒரு பங்கை, (மகளிரது நிதம்பத்தில் எப்படி எகாக்ரசித்தம் வைத்திருந்தானோ, அவ்விதப் பற்றுதலுடன்) கடவுள்மீது தியானிப்பானேயாகில் அவன் ஒரு காலத்திலும் கண்டுங் கேட்டுமிராத காட்சியைக்கண்டு ஆனந்தவாரியில் திளைப்பான் என்பதை ஞாபகத்தில் வை. ஒருமடவரலின் மீது உண்மையான மோகதாகங்கொண்டுவிட்டால் நீ எவ்வித துன்பத்துக்கு ஆளானபோதிலும் உன் மனதைக்கவர்ந்தவள் மேம்பாடடைவதையே நீ விரும்புவது சகசமாகலின், நீ உண்மையான உள்ளன்புடையவனுனால் நீ அன்புவைத்த பொருள் எதுவோ, அது சிறப்பெய்தும்ஒன்றையே பொருளாக மதித்து அதையே விரும்புவாய். உனக்கு எத்தகைய துன்பங்கள்வரினும் அதனைப் பொருட்படுத்த மாட்டாயல்லவா?

(14) உண்மையான பக்திமானுக்குக் கடவுள் சமுகமானது அதிக சமீபத்திலிருக்கிறது கொஞ்சமேனுந் தூரமல்ல. ஏனெனில் நிர்மலமான அன்புள்ளவனுடைய இருதயம் களங்கமிகதமாகி அன்பினது சொரூபமாகவேயிருக்கிறது. அன்றியும் மேட்டிலிருந்து தாழ்வேபள்ளத்தைநாடி விரைந்துசெல்லும் சலப்பிரவாகத்தைப் போல் பரிசுத்தமான பேரன்பென்னும் தாம்புக்கயிறனது இயற்கையாகவே கடவுளது பாதகமலங்களைத் தன்னிலிட்டு

நீங்காதபடி பிணைத்து விடுகிறது. உனது உள்ளம் கொலை, களவு, கள், காமம் பொய், குரோதம், உலோபம், மோகம், மதம், அழுக்காறு முதலிய தீச்செயல்களைவிட்டு நீங்கி பரிசுத்தம் அடைந்தபிறகே அன்பென்னும் பயிர், உனது இருதய பூமியில் முளைத்து விகசிதமாகும். மேற்காட்டிய தீயசெயல்கள் உன்னைவிட்டு நீங்காதபோது எவ்விதமாக வேனும் பக்தி செய்வதாக எண்ணி உடல் வருந்திஞல் அது சரீரத்திற்குப்பிடித்த கேடேயன்றி ஒரு எட்டுணையும் பயன்படாது. பக்தி மார்க்கத்திற்கும் கொலை, களவு முதலிய பாதகங்களுக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது. கொலை, களவு முதலியவைகளைச் செய்வதனுல் பக்தி மார்க்கம் எப்படிக்கெடும் என்று நினைந்து தீய செய்கைகளைச் செய்வாயாகில், களைநிறைந்த பயிர் விளையாமல் கெட்டுப்போவது போல் பக்தி மார்க்கத்தையும் இழக்கப் பெறுவதன்றி ஏற்கனவே கைகூடிய தவத்தையும் இழந்துவிடுவாய்.

(15) பிறர் உன்னிடத்தில் செய்யும் புகழ்ச்சியும் இகழ்ச்சியும் ஒரே தன்மைத்தென்று கருதவேண்டும். இது புகழ்ச்சி இது இகழ்ச்சியென்று அவ்வசனங்களில் உனது மனமானது சென்று பிரித்தறிய உலாவுமேயானுல், உனது அன்பு பகிர்முகத்திற்செல்ல எத்தனிக்கும். அதனுல் அன்பென்னும் பயிருக்கு இடைவிடாமல் பக்தியென்னும் நீரிறைத்தமுத்துலே எற்றமானது,புறப்பைங்கூழாகிய வேண்டாத பயிர்களுக்குப் பாயும்படி சிறிது இறைத்தவுடன், அன்பென்னும் பயிரானது அவ்வளவு சிலாக்கியமாய் விளையாது. ஆதலால் எல்லாப்புகழ்ச்சியும் இகழ்ச்சியுமாகிய வாக்கியப் பிரயோகங்களை எழுதியாவது நினைந்தாவது அவைகளுக்கேற்பட்ட அட்சரங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனி ஆராய்ந்து நோக்குமிடத்து ஒவ்வொரு அட்சரமும் சிறந்த அட்சரங்களாகவே கல்விமான் (நல்லோர்) களுக்குத் தோன்றும்.

(16) ஒரு மனிதனை வாருங்கள் என்பதற்கு பதிலாக வாடா என்று அழைத்தால் உருத்திர கோபமுண்டாகிறது.

அந்த வாடா என்னும் வாக்கியமானது "வாடாத பூவே மருக்கோழந்தே" என்னும் அழகிய ஒரு சொற் றொடரில் முதன்மையான வாக்கியமென்றும் "வா" என்னும் அட்சரமானது, தேவா? என்று பரப்பிரம்ம சொரூபமாகிய கடவுளையும் பாவா என்னும் பெரியோர்களையும் விளக்கும் ஒரு வாக்கியத்தின் உயர்ந்த வழி அட்சரமென்றும், "டா" என்னும் அட்சரமானது 'ஆதீசேடா?' என்று இரண்டாயிரம் நாவைப்படைத்த கல்விமானுகிய அனந்தனையும் வீடா, நாடா, என்ற பொருளையும் விளக்கும் ஒரு வாக்கியத்தின் இறுதி அட்சரமென்றும், ஆகையால் "வாடா" என்று நம்மை அழைத்தசானது நம்மைக் கடவுளின் அமிசமென்றும் ஆதிசேடனைப்போன்ற மகா கல்விமானென்றும் குறிக்கின்றது. கழுதை என்று ஒருவன் நம்மைச் சொன்னால் கழுதை யென்னும் வாக்கியத்திலுள்ள முதலட்சரமாகிய க என்னும் அட்சரமானது கடவுள் என்னும் வாக்கியத்தின் முதல் அட்சரமாகையால் நம்மைக் கடவுள் என்று குறித்தானென்றும், இரண்டாம் அட்சரமாகிய ழ என்னும் அட்சரமானது தொழுகை என்னும் வாக்கியத்தின் நடு அட்சரமாகையால் நம்மைத் தொழுதானென்றும், தை என்னும் அட்சரமானது மரியாதை என்னும் வாக்கியத்தின் இறுதி அட்சரமாதலால் நமக்கு மரியாதை செய்தானென்றும் ஏன் கொள்ளக்கூடாது? ஆகையால் இந்த வாக்கியமானது உயர்ந்த வாக்கியமென்று கருதுவாயானால் உனக்கு எவ்வளவோ மனஞ்சாந்தி யுண்டாகும் என்பது நாம் சொல்லாமலே விளங்கும்.

(17) அன்றியும் உன்னை ஒரு அன்னிய பாஷைக்காரன் கழுதையே! குரங்கே! நாயே! பேயே! என்று ஒரு சமயத்தில் வைதால் அதன் பொருள் உனக்கு விளங்காததால் அந்தப் பாஷை தெரிந்தவரிடத்தில் இவர் என்ன சொல்லுகிறார் என்று சாந்தமாகவே கேட்டறிகிறாய். அதன் பொருள் தெரிந்தவுடன் நீ அவனோடு மல்யுத்தம் பண்ண எத்தனிக்கிறாய். ஆகையால் பெரியோர்கள் தோன்றச் செய்வது அந்தக்காரணங்களின் தொழிலென்றிப் பிறிதில்லை.

(18) இன்னும் சுருக்கமாகச் சொல்லுமிடத்தில் எவ்விதக் கொடுமையான அதாவது பழிப்பான வார்த்தைகளையும் வசவுகளையும் கேட்டு எல்லாம் பாலபாடத்திலுள்ள எழுத்துக்கள் தானே என்று எண்ணுபவர்கள் எவரோ, அவரே சர்வ உலகங்களையுஞ்செயிக்க வல்லவர். அவரே சாந்த குணையம் என்பதற் கையமில்லை. புகழ்ச்சிக்காக மனோற் சாகமும் இகழ்ச்சிக்காக மனோசாஞ்சல்யமும் ஏற்படாமல் பாதுகாப்பதுடன் பெரியவர், சிறியவர், நல்லவர், கெட்டவர், உறவர், பகைவர் என்கிறபேதாபேத முட்செடிகளையும் கள்ளிமுள்ளைகளையும் கைறப்பிடுங்கி வெகு தூரத்தில் எறிந்து விடுவது மன்றி அவைகளைத் தவாக்கினியினற் சுட்டெறித்து விடவும் வேண்டும். இவ்விதமான சம (திருஷ்டி) நோக்குடையவர்கள், கடவுள் ஒருவரையன்றி ஏனைய வஸ்துக்களை பொருட்பண்ணமாட்டார்கள். இவ்விதமான சமரசஞான புத்தி ஒருவனுக்கு குடிகொண்டு விட்டால் அவனுக்கு எல்லா உலகமும் எதிர்நின்று குற்றேவல்புரியும்.

(19) அத்தகைய மகானுக்கு "எல்லாம் கடவுள் செயல்" அவரே நமது பரம கருணாநிதியாகிய மாதா; அவர் நமக்கு நன்மையன்றி ஒருபோதும் தீமை செய்ய மாட்டார் என்கிற பூரண நம்பிக்கையும் விசுவாசமும் ஏற்படுகிறகாலத்தில் புலி கரடி முதலிய துஷ்ட விலங்குகள் தன்னைக் கொல்லவந்தாலும், விஷந்தங்கிய கொடிய சர்ப்பங்கள் சீறிக்கொண்டு கடிக்கவந்தாலும் அவைகளை நோக்கி ஏ! புலி கரடிகளே! சர்ப்பங்களே! எல்லோரும் வாருங்கள். நாமெல்லோரும் ஒரேகடவுளின் ஆதீனத்துக்குட்பட்டவர்கள். நாமனைவரும் ஒருவர்க்கொருவர் சகோதரர்கள் அங்ஙனமிருந்தும் நீங்கள் இப்போது என்னிடம் நமது அருமைப் பிதாவாகிய கருணாகரக்கடவுளின் ஆக்ஞைப்பிரகாரம் வந்தவர்களையன்றி உங்கள் சுயேச்சையாக வரவில்லை. நீங்கள் எனக்குப் பகைவர்களுமல்ல. ஆதலின் நீங்கள் என்னை எது செய்ய வேண்டுமென்றாலுஞ் செய்துகொள்ளுங்கள் என்று இதோபதேசங்கூறி மகிழ்ந்து, காலகரணஞ் செய்யாமல்

தங்களை இவ்வளவு சிக்கிரத்தில்அனுப்பிவைத்த கடவுளுக்கே எல்லாப் புகழும் உண்டாவதாக என்று தோத்திரம் பாடுவான்.

(20) குஷ்டம், சூலை, மேகம், கிரந்தி முதலிய எவ்விதக் கொடுமான வியாதிகள் சம்பவித்தாலும், வேறெவ்விதத் துன்பங்கள் நேர்ந்தாலும், துன்பங்களே, வாருங்கள்! வாருங்கள்!! எமது எசமானன் அனுப்பிய விருந்தினர்களே நான் எதிர் சென்று அழையாமலிருக்க என்னுல் எப்படி முடியும்? வாருங்கள்!!! என்று அழைத்து அவைகளுக்கு முகமன் கூறி, அத்துன்பங்களை நோக்கி அன்பர்களே! நீங்கள் எவ்விதக் கவலையுமின்றி, எனது சம்பட்சணையிலிருந்து ஆனந்தமாய்க் காலங்கழியுங்கள்; நான் தங்களுக்குச் செய்ய வேண்டிய ஊழியங்களைச் சரிவரச் செய்துவருகிறேன் என்று வேண்டிக்கொள்ளும் பாவனையாக அந்தக் கொடிய துன்பங்களைச் சகிப்பான்.

(21) இங்ஙனம் எல்லாம் கடவுள் செயல் என்று சிந்தித்துப் பேரன்பு செலுத்துவது, மெய்ஞ்ஞானிகளாகிய பக்திமான்களால் முடியுமேயன்றி, சாமானிய பிரபஞ்சத்தவர்களால் ஒருபோதும் முடியாதென்பது உனக்கு விளக்கமாகவில்லையா? ஒருகாலத்தில் பட்டினத்தடிகள் சர்வ பாசபந்தங்களையும் தணந்து வெளியேறிப் பேறையூர், அவிநாசி, முருகன்பூண்டி முதலிய நகர்ப்புறங்களில் வசிக்குங்கால் நடைபெற்ற ஒரு அற்புதத்தின்போது, இகழ்ச்சியும் புகழ்ச்சியும் தோன்ற அவற்றிற்குச் சமநோக்குடன் சென்ற சரித்திரத்தை நமது ஞானக்களஞ்சியம் 10-வது அத்தியாயம் சிவன்முத்தர்களிலக்கணத்தில் பார்த்து நன்குணர்வாயாக.

(22) நீ கடவுளிடத்தில் மாறுத விசுவாசமும், நம்பிக்கையும் வைப்பாயானுல் சர்வசஞ்சல ரகிதனுக எல்லாக் கஷ்ட நஷ்டங்களிலிருந்தும் விடுவிக்கப்பெறுவாய். சிறு குழந்தையைப்போல் கபடற்றவிதமாக அவரை அனவரதமும் ஆராதிப்பாயாகில், அவரும் உன்னைச்சிறுகுழந்தையாகப்பாவித்து

தமது கருணையென்னுந் திருக்கரத்தாற் றாக்கி மார்போ டணைத்து அமிர்தசஞ்சீவியாகிய ஞானப்பாலூட்டி அருட் டாயாகக் காப்பாற்றி ஆசீர்வதிப்பார். குழந்தையானது பசி வந்தவுடனும் துன்பம் வந்தவுடனும் தாயைநோக்கி வீரிட்டு அழுகின்றது; அந்தத் தொனியைக்கேட்ட மாதாவானவள் சகியாமல் ஓடோடியும் வந்து தூக்கி ஆதரிக்கிறாள். அது போல் நீ உனது சனனமரணமென்னும் நீங்காத பெரும் பிணியை நினைந்து நினைந்து ஆன்மவிசாரத்தில் அழுந்தி மனங்கசிந்து அவரைக்கூப்பிடுவாயானால், இமைப்பொழுதே னும் அவர் உன்னிடம் வருவதற்கு தாமதிக்கமாட்டார். ஆதலால் உன்னைக் காப்பாற்றுதற்கு ஒரு சமானிருக்கிறார். அவருடைய ஆதீனத்திலும் அவருடைய சன்னிதானத்தி லும் நீ இருக்கும்போது உனக்கு எவ்விதக் குறைவுமே யில்லை. ஆதலின் நம்மைப்போற் பாக்கியசாலிகள் யாருமே யில்லையென் றுணர்ந்து, மாதாபிதாவுள்ள சேயைப்போல் உற்சாகத்துடனிருந்து அன்புசெலுத்து. இதர சுகாசுகங் களை இலட்சியங் கொள்ளாதே. பக்தி செலுத்துபவர்கள் உற்சாகக் குறைவுடனாவது, வசனங்கிருதப் பிரியத்துட னாவது இருக்கப்படாது. சதாவும் மலர்ந்த முகத்துடன் பூரண அன்புசெலுத்துபவர்கட்குத் திருவருள் விழைவால் எதிர்பாராத மனோசாந்தி யுண்டாகும். அகண்ட பரிபூரண னந்த வாரிதியில் சதா மூழ்கி நிர்ப்பயமாயும் குதூகலமாயும் இளைப்பாறி யிருக்கலாம்.

(23) பகிர்முகத் தோற்றங்கள் உள்ளத்தின் உணர்ச் சியை ஒருபொழுதும் விவரிப்பதில்லையென்பதை யுணர்ந்த வனாய் வெளிவிவகாரங்களைக் குறைத்து வார்த்தையாடுவதில் செட்டாயிரு. உன் ஒழுக்கம் உனக்குப் பிரகாசத்தைத் தருவதன்றி, வார்த்தைகளும் பாஷாலட்சணமுமல்ல. பெரிய தத்துவஞானிகள் பாஷாலங்கார மின்றிப் பேசுகிறார்கள். ஆனால், அவர்கள் வார்த்தைகளில் சியம், நம்பிக்கை, உற் சாகம் இவைகளின் பிரகாசம் நிறைந்திருக்கின்றன. உன் பக்தியெனும் இளம்பயிரை மனமாய் உன் உள்ளத்தின் மேல் வளரவிடு. பூரண அன்பையும், உண்மையான கண்

ணிரையும் அதற்குத் தண்ணீராக வார். பூரண உள்ளத் தோடும் அறிவோடும் மாத்திரம் செய்; பயனுக்காகக் கவனியாதே.

(24) நீ உண்மையான பக்திமானுயிருக்க விரும்பினுல் பிரபஞ்சத் தோற்ற விவகாரங்கட் கெல்லாம் விலகியிருக்க வேண்டும். உன் சாந்தியை உலகத்திற்குரிய எந்த நிலைமை யாலும் எப்பொழுதும் மாற்ற முடியாது. பரிசுத்தமாயும் எல்லையற்றவனுயும், நிட்காமியமாயும், எங்கும் அன்பு நிறைந்த விசால இருதயமுடையவனுகவு மிரு. சலிக்காமலும் கலங்காமலும் கெம்பீரமான தோற்றத்துடன் மனே சாஞ்சல்யமின்றி, ஆனந்த பரவசத்துடன் பக்திசெலுத்து. இவ்வுலகதிலுள்ள எத்தகைய வன்மைபெற்ற கருமங்களாலு லும், எப்பொழுதும் உன்னை வெல்லவே முடியாது. உனது மனேவலிமையையும் மாற்றமுடியாது. நிட்காமியமாகச் செய்யப்பெற்ற பேரன்பு நிரம்பிய இருதய விசால முடையவர்களைப் பிரபஞ்சத் தோற்றங்கள் ஏறெடுத்துப் பார்க்கவும் பயப்படும். எத்தனேபேர் உன்னை வணங்கினு லும் புகழ்ந்தாலும், நீ மாத்திரம் உன்னைப் பெரியோனுக ஒருபோதும் கொண்டாடாதே. ஒப்பில், பெரியோனுகிய அவரது தாழ்மையுள்ள வேலைக்காரனுக உன்னை எண்ணி அபாயத்தை நினையாமல் அவரது வேலைக்காக எப்பொழுதும் தயாராக நில். கடவுளை வணங்கும்போதும், உன் வாழ்நாளை உறுதியாய் (ஆராதனை அனுபவத்தில்) நடத்தும்போதும் கொடுமையும் அகாலமுமான மரணத்தைச் சந்தித்தாலுங் கூட அதுவும் ஆனந்தமே. அப்படியில்லாமல் நீ வசிக்கும் போது உன் ஆனந்தத்திலும், அனுகூல சித்தியிலுங்கூட அவரிடமிருந்து உன்னை அப்பாற்படுத்துகிறுய். அதுமாத் திரம் மிகப் பாவமான காரியம். ஆடித்தடித்துவரும் உன் சித்தசலனங்கள் உன்னை அடிக்குப்போகாதபடி சாக்கிரதை யாயிரு. தைரியமாகவும், பயமற்றும் செய். ஒரு பொழு தும் பொறுமையற்றவனு யிராதே. பெரிய சித்திகள் நம் முன் தோன்றும்போது, அங்கு உன்னைப் புகழ்தற்குப் பல்லாயிரம் சனங்கள் இருக்கிறுர்கள். ஓர் கேவல பயங்

கொள்ளி, முற்றும் சுயகாரியப் பிரியனை ஒருவனுங்கூட அங்கு தன்னை ஓர் சூரனென எண்பிப்பதற்குத் தன் உபிரையுங் கொடுக்கக்கூடும். ஆனால் அற்பமான காரியத்தையும் பிறர் அறியாதபடி செய்யக்கூடியவனெவனை அவனே உண்மையான சூரன். மனிதவருக்கத்தில் சுயநலங்கருதா அன்பன் எவனை அவனே உண்மையில் ஆனந்தி.

(25) அவர்கள் என்னை வணங்கினார்கள், என்னை உபசரித்தார்கள் என்று எவன் சொல்லுகிறானை அவன் நிறைந்த அனுபவமில்லாத அற்பச் சந்தோஷி யாவன். உன்னைநோக்கி ஒருவன் வணங்கும்போது, அவன் உனது எலும்பு, தோல், நிணம் நிறைந்த மாமிச மூட்டையாகிய இந்தச் சரீரத்தையா? நினைந்து வணங்குவான். உனது இருதயாசனத்தில் வீற்றிருக்கும் பரம கருணாநிதியாகிய கடவுளுக்காகவேதான் வணங்குகிறானென்று நிச்சயமாய்க் கருதவேண்டும். நான் அநேக அரிய பெரிய காரியங்களைச் செய்துவிட்டேன் என்று படாடோபமாய்த் தற்புகழ்ச்சியுடன் பிறரிடத்தில் நினைக்கவும் சம்பாஷிக்கவுங்கூடாது. இவ்வுலகத்தில் எண்ணிறைந்த மகான்களின் அற்புதச் செயல்களின் முன்னே நாம் எம்மாத்திரம்? மகா வலிமையுடைய ஒரு ஆண்சிங்கத்தின் முன் கேவலம் நாம் ஒரு சுண்டெலியிலும் தாழ்ந்தவனையென்று தன்னைநித்தித்து, நானென்னும் அகந்தை முட்செடியை வேருடன் பிடுங்கியுலர்த்தி, அறிவென்னும் நெருப்பிற் கொளுத்திப் பஸ்மீகரித்துவிட வேண்டும்.

(26) ஒப்புவமை தணந்த அருட்பெருஞ்சோதியாகிய ஆண்டவன் வேலைக்காரர்களுள் நாம் ஒரு தாழ்ந்த வேலைக்காரனென்றெண்ணி அனவரதமும் அவரது குற்றேவலுக்குத் தயாராக எதிர்பார்த்து நிற்கவேண்டும். கடவுளிடத்தில் அன்பு செலுத்தும்போது அகாலமரணம் நேர்ந்தாலும் இதர கிருத்தியங்கள் புரிவதனால் மரணமாகாமல் கடவுளுக்குச் செய்யும் தொண்டின் மூலமாகவாவது மரணமடைகிறோமே! நமது பாக்கியமே பெரும் பாக்கியம்! என்று

அளவில்லாத ஆனந்தமடைய வேண்டும். இவ்விதமாக நீ கடவுளுக்கு உண்மையான தொண்டுனை நடப்பதுடன், உனது குறைவு நிறைவுகளை அவரிடத்தில் அன்புடன் சொல்லிப் பிரார்த்திக்கும்போது உன்னைக்காப்பாற்ற முன் வராமலிருக்கமாட்டார். ஏன்? அவர் சமீபமும் தூரமுமற்ற வர். நினைப்பவர்களுடைய இருதயத்தையே அரங்காக அமைத்து நடனஞ்செய்பவர். நீ எவ்வளவுக்கு அதிகமாக நினைக்கிறாயோ அவ்வளவு சமீபத்திலுள்ளவர். எவ்வளவுக்கு நினைக்காமலிருக்கிறாயோ அவ்வளவு தூரத்திலுள்ளவர். அவர் ஒருவருடைய பராதீன மற்றவர். ஆதலால் நீ அவரைக் கிட்டுவதும், விலகிவிடுவதும் உன்னுடைய முயற்சியிலிருக்கிறது. "தெய்வத்தா லாகா தெனினும் முயற்சிதன் மெய்வருத்தக் கூலிதரும்" முயற்சி யென்றால் தற்போத மென்று கருதக் கூடாது. தற்போதம் நீங்கி அயர்ந்தபோது ஆனந்த நித்திரையுண்டாகிச் சுயம்பிரகாசந் தோற்றுவிக்கும். இந்த முயற்சியைப் பின்வரும் தன் முயற்சி என்னும் அத்தியாயத்தில் விளக்கமாக எழுதியிருக்கிறது. தன்னைப் பற்றிப் புகழ்படப் பிரான்தாபிக்கிறவன் உண்மையான ஊழியனுமல்ல; பூசகனுமல்ல.

27. நீ கடவுளுடன் அன்பு செலுத்தி வாழும்போது உனது அன்பு வலையில் அகப்பட்ட பெருமானுகிய கடவுளுடைய சுயம்பிரகாசத் தோற்றத்தையன்றி, ஏனைய வஸ்துக்கள் உன் கட்புலனுக்குப் புலப்படாது. அன்பென்னும் பசிய இளம்பயிரானது பூரணமாக வளரும்படி உனது ஆனந்தக் கண்ணீர்ப் பிரவாகத்தை விட்டால், பள்ளத்தை நாடிச்செல்லும் தண்ணீரைப் போல் அவருடைய திருவடிக்குக் கங்கு கரையில்லாமல் பெருகியோடும். அப்போது சிவபோதத்தை மேலிட்டுச், சீவபோதமாகிய தற்போதமொழிந்து அன்னை மறந்தவனுகின்றாய். இவ்விதமான சுவானுபவமே ஆனந்த ரூபமானது. ஏனெனில், அது ஆதி, மத்தி, யந்த மின்றிய எல்லையில்லாத பரவெளியில் கலக்கின்றது. இத்தகைய பேரானந்தமே முழுமுதற் கடவுளின் உண்மையான

தோற்றம். வேறெவ்விதமான தோற்றங்களும் அசத்தியாகும்.

28. "அன்பின் வழியதுயிர் நிலை" எனப்புகழப்பெற்ற தலைமை அன்பானது, உனது உடலுக்கும், உள்ளத்துக்கும் பரம சாந்தத்தையும், பரமானந்தத்தையும் நல்கும். ஒரு வஸ்துவிலோ, ஒரு குறிப்பிலோ, ஒருவரிடத்திலோ நீ அன்பு பூரணமாக வைத்துவிட்டால் அந்த அன்புக்கு இலக்கான பொருள் இன்னல் அடையுங்காலத்து, உன்மனமும் இன்னலடைந்து மிகுந்த வேதனைக்குள்ளாகும். சிற்சில சமயங்களில் அவ்வன்புக்கிலக்கான பொருளைக் கரவுப்பொருள் போல் பிறரறியாமலும், நீ மறைத்துவைக்கவேண்டியதாகவும் வந்து முடியும்; அன்றியும் நீ அன்புவைக்கப்பெற்ற பொருளானது தான் இன்னொருடைய அன்புக்கு உரிமையாயிருக்கிறோம் என்று உணர்ந்துகொள்ளாத விதமாக நீயே தனக்குள் அடக்கிவைப்பதுமுண்டு. நீ அன்புவைக்கப்பெற்ற பொருள் துன்பமான நிலையிலிருப்பதாக நீ அறிந்துவிட்டால் உடனே உன்னையும் அறியாமலே அவ்வன்பானது சீக்கிரம் வெளிப்பட்டுவிடும்.

அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

29. இருதய சிதாகாய மூர்த்திகர அன்பானது யாதொரு முயற்சியுமின்றி உலகவிடயங்களிலிருந்து ஒருவனை விலகிக் கொள்ளக்கூடியதாக்குகிறது. நம் பூரண உள்ளத்தையும் நம் தியான ரூபத்திற்காக வைத்திருக்கும் போது, நம்மை மயக்கக் கூடியது இவ்வுலகத்திலெதுவுமில்லை. உண்மைத் துறவு நிலை சுலபமாய்க் கிடைக்கிறது. இதன் உண்மையான அர்த்தம், நாம் கடவுளுக்கு ஆராதனை செய்யவேண்டும்; அடுத்தடுத்து நாமவரை நினைக்க வேண்டும் என்பதே. இதனால் நாம் சுத்தியடைகிறோம். ஏனெனில் ஒரு பரிசுத்த வஸ்துவை நாம் தியானிக்கும்போது சுபாவமாகவே நம்முடைய மலங்கள் கழுவப்பட்டுப்போகின்றன. கடவுளின் திருவடிகளில் நாம் அடைக்கலம் புகும்போது

அல்லது நம் பலவை அவரிடம் சமத்தும்போது நம் பூரண உள்ளமும் அவரைப் பற்றிக்கொள்ளுகிறது. இனி உலகத்தைப் பற்றிய கவலையில்லை. பின் நம் பொறுப்புக் கரைந்து போகிறது; இதுவே உண்மைத் துறவு, உண்மையான பாவவிமோசனம்.

30. அடுத்தடுத்து நாம் எத்தனையோ பிரார்த்தனைகள் செய்தும் யாதொரு பிரயோசனத்தையும் காணவில்லையே; நாம் செய்துகொண்ட விண்ணப்ப மனுவிற்கு எவ்விதமான பதில் உத்திரவும் வரவில்லையே; நம்முடைய பிரார்த்தனையைக் கடவுள் கவனிக்கவில்லைபோலும் என்று தளர்ச்சி அடையக்கூடாது. நீ ஒரு மனிதனிடத்தில் ஒரு காரியத்தை உத்தேசித்து எத்தனையோ தடவை அலைகிறாய்; அப்படி அலைந்தும் சில காரியங்கள் உனக்குப் பிரதிகூலமாக முடிந்துவிடுகிறது. சில காரியங்கள் உனக்கு அநுகூலமாகவும் ஏற்படுகிறது. ஒரு உத்தியோகத்தை விரும்பி, மேல் உத்தியோகஸ்தரிடத்தில் மனுக் கொடுக்கிறாய். அதற்குப் பதிலளிக்கப்படாவிட்டால் மறுபடியும் முன் கொடுத்த மனுவையும் குறித்து மறு மனுக் கொடுக்கிறாய். அதற்கும் பதிலளிக்கப்படாவிட்டால் மேலும் மேலும் விடாமுயற்சியுடன் சிரத்தை யெடுக்கிறாய். அவ்விதம் செய்தும் சிற்சில காரியங்கள் அவலமாய்ப் போய்விடுகிறது. அதையும் பொறுத்துக்கொண் டிருக்கிறயல்லவா? அதுபோல் கடவுள் சமுகத்திற்கு அனுப்பப்பட்ட பிரார்த்தனை விண்ணப்ப மனுவானது மேற்கூறியதைப் போலன்று. கடவுள், மனித உத்தியோகஸ்தரைப்போல் உத்தியோகங் கொடுக்க முடியாமலும், பராமுகமாகவும் இருக்கவில்லை. உனது இருதய தடாகத்தில் அன்பென்னும் தேவநீர்த்தம் பெருகிக் கரை புரளும்வரை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். எப்போது பெருகும், அவர் எப்போது அருள்புரிவார் என்பதை நீ எதிர்பார்ப்பது கூடவே கூடாது. ஒருவன் கூலிபெறுவதிலேயே நோக்கமாக இருப்பானேயானால் சரிவர வேலை செய்யமாட்டான். அப்போது எஜமானுக்கு திருப்தியில்லாமல் வேலையினின்றும் நீக்கப்படுவான். வேலையைச்

சரிவரச்செய்தால் கூலி தன்னுலே கிடைக்கும் என்கிற பொறுமை உனச்கு வேண்டாமா?

31. நீ உண்மையில் புண்ணியத்தைப்போல் பாவத்தையும், பாவத்தைப்போல் புண்ணியத்தையும் செய்யக் கூடிய அறியாக் குழந்தை. ஆரம்பத்திலேயே கடவுளுடைய பெருந்தன்மையை அறியப்போதுமான சக்தி உனக்கில்லை. ஆதலால் நீ எப்போதும் அவருடைய உழைப்பாளியாகவே இருக்கவேண்டும். நன்மையோ தீமையோ சர்வத்தையும் அவருக்கு அர்ப்பணஞ் செய்யவேண்டும். உண்மையான தொண்டு இன்னது என்பதைப் பிரதமத்தில் அறியாததால் தொண்டு செய்வதாக நினைத்து ஒரு சமயம் அறியாமல் தீமையும் செய்துவிடுகிறாய். தொண்டையும் தீமையையும் சீர்தூக்கிப்பார்த்து, உண்மையுழைப்புக்குத் தகுந்த பிரசனம் கொடுக்கக் கடவுளானவர் தயாராக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்.

32. ஒரு மனிதன் ஆரம்பத்தில் மூர்க்கனுகவும், கருணையில்லாதவனுகவும், பொறுமையுள்ளவனுகவு மிருக்கிறான். அவனிடத்தில் உண்மையான அன்பு பிரகாசிக்கும் போது அவன் அடக்க முடையவனுகவும், சாந்த சொரூபியாகவும், சர்வ பிராணிகளிடத்திலும் அன்புடையவனுகவும் வளர்கிறான். மூதலில் அவன் அவ்வளவு துஷ்டனுகவிருந்து பின்னல் நல்லவனுகவேண்டிய காரணமென்ன? அது அவன் செய்து கொண்டதல்ல. அவன் அன்பினுல் உபாசிக்கப் பெற்ற மூர்த்தியானது அவனிடத்தில் உதயமாகி, அவனுடைய தீயகுணங்களை நீக்கி, எல்லாப் பொருள்களிலும் பிரதி பலித்துக் காட்டுவதனுல், அவன் எவ்விடத்திலும் அன்புருவாகக் காண்கிறான். அவன் எல்லோருக்கும் அன்பனுமாகிறான்.

33. கிருஷ்ணனிடம் அன்பு கொண்ட சத்தியபாமா அவரை மற்ற மாதர்களிடம் செல்ல விடாமல் தன்னிடமே வைத்துக்கொள்ள எண்ணி ஓர் சூழ்ச்சி செய்தாள். ஒருநாள் கண்ணன் வந்தவுடன் சுவாமி, நீர் என்மீது ஆசை வைத்

திருப்பது உண்மையாயின், எனக்கொரு வரம் தரல்வேண்டு மென்றாள். கண்ணன், அஃதென்னவென, இந்த நிமிட முதல் என் மாளிகையைவிட்டு வேறெவிடமே போகக்கூடாது என்றாள். கண்ணன் அவ்வாறே யாகுகவென்று அன்று முதல் அங்கேயே இருந்துவிட்டார்.

34. பின்னர் சிலநாட் கழித்து நாரதர் சத்தியபாமாவிடம் வந்து சேமம் வினவ, அவள் முகமலர்ச்சியுடன் நாரதரே! என்னைப்போல் பாக்கியசாலிகள் யாருமில்லை; கண்ணபிரான் என்னைவிட்டு அப்பாற் போவதில்லை; மற்ற மனைவிகளைக் கண்ணெடுத்துப் பார்ப்பதுமில்லை. அவ்வித வரம் அவரிடம் நான் பெற்றுக்கொண்டேன் என, நாரதர் அதிசயித்து அதைச் சோதிக்குமாறு ருக்மணியின் வீட்டுக்குச் சென்றார். அங்கே கண்ணன் திவ்வியாலங்கிருதராய், ருக்மணிசமேதராயெழுந்தருளியிருப்பதைக் கண்டு அதிசயித்து, சத்தியபாமாவிடம் ஓடிவந்து "ஏ! சத்தியபாமா! நீ அசத்தியபாமாவாஞாய்; சில நாழிகைக்கு முன் ஏகதேதாபிதற்றினையே? பெரியோர்களிடம் பொய் சொல்வது தகாதென்று உனக்குத் தெரியாதா? எப்போதும் கிருஷ்ணன் உன்னிடமிருக்கிறதாகச் சொன்னையே! சில நாழிகைக்கு முன்னதாக நான் உன் புருஷனை ருக்மணி வீட்டிற் பார்த்தேனே? இப்படிப் பொய்சொல்லி வீண்பெருமை பேசிக் கொள்வதில் என்ன பயன் என்றார். சத்தியபாமா குலுங்க நகைத்து ஐயா! நாரதரே! உமக்குச் சித்தப்பிரமை போலும்? என் நாதர் இதோ இருக்கிறார்; அவர் எங்கும் போகவில்லையெனக் கூற, அம் மகரிஷி பலகணி வழியாய் எட்டிப்பார்த்துக் கண்ணபிரான் இருப்பை யறிந்து, "ஓகோ! மோசம்போனேமே" நம்முடைய பக்திப் பெருக்கால் ருக்மணியின் வீட்டில் கண்ணன் இருப்பதாகத் தோன்றியது போலும்; ஆயினும், மறுபடியும் போய்ப் பார்ப்போமென்று ஓடினார். அங்கேயும் கண்ணபிரானிருந்தார். ஒவ்வொரு மகளிர் வீட்டிலுந் தேடினார். அங்கும் கண்ணன் இருந்தனை யுணர்ந்து, பெரியாரைப் பரீட்சிக்க

நம்மாலியலாது, இங்ஙனமே கடவுளும் அன்பருக்கு அன்புருவாகவே யிருக்கிறார் என்றுணர்ந்தனராம்.

35. தனக்குப் பசி, தாகம், சீதோஷ்ணம் முதலானவை தாக்கப்பட்டால் அவன் தன் மனோதமூர்த்தி வருந்துவதாக எண்ணி அதற்காகவே அவன் உண்கிறான்; கவலையடைகிறான். தாம் உண்டுடுத்து திருப்தியடைவதை தனது மங்களமூர்த்தி திருப்தியடைந்ததாக எண்ணுகிறான். தனது மானத்தை விழிபாட்டிற்குரிய அவருக்காகவே ஒவ்வொரு விதமான கவலையும் எடுக்கிறான். அதாவது அவன் தன் தேகத்தை, தன் மங்கள மூர்த்திக்குரிய ஆலயமாய்க் காண்கிறான். அதுகாரணமாக அவன் எதைச் செய்யினும், அவனது அன்பிற்குரிய கடவுளுக்கு நைவேதனமாகிறதாகையால், அவன் இருதயபீடத்தில் மூற்றும் பரிசுத்தமானதும், மதிக்கத்தக்கதுமான நைவேதனங்களையே வைக்கும்படி சாக்கிரதையாகிறான். உண்மை ஆராதனைக்காரன் இவ்வாறு தன் சித்தபூரணத்திற்காக வேலைசெய்கிறான்; வேறெதற்கு மல்ல. அவன் தேகமும், மற்றெல்லாமும் அவன் மங்கள மூர்த்திக்குரியதாய் உணருகிறான். தனக்குள்ளே வசிக்கும் அரூப மூர்த்திகரத்தை அடிக்கடி இந்த விதமாய் தியானிப்பதனாலேயே பிரபஞ்ச சம்பந்தமான சகல கட்டுகளினின்றும் விடுதலையடைகிறான், அன்றியும் அவன், நான் என்னும் ஆணவமலத்தை அறவே நீக்கி சர்வமும் கடவுளார்ப்பணமாகச் செய்வதால் அவன் செய்வதெல்லாம் மங்களகாரியமாகவே முடிகிறது. இந்தவிதமான உண்மையாராதனை உன் சீவியத்தின் ஒவ்வொரு விநாடியிலும், உன் மங்கள மூர்த்தியுடன் நீ வசிக்கும் அவ்விடத்தை ஓர் ஒழுங்கிற்குக் கொண்டுவருகிறது. நீ அவருடன் மாத்திரமே வசிக்கும்பொழுது எல்லாத் துன்பங்களும் நீங்கின. உன் அன்புவலைப்பட்ட அவர் ஒருவரையன்றி, நீ எதிர் பார்க்கும்படி மிகுந்ததாய் அங்கு வாழ்வது ஒன்றுமில்லை. உன் அன்புரிமைகொண்ட அவருடைய திருவடிகளில் உன் பூரண உள்ளமும் பொழிந்தோடுகிறது. நீ அவரிடத்

தில், உன்னை மறந்திருப்பவனுகிறாய்; இதுவே ஆனந்தரூப மானது; ஏனெனில், அது முடிவற்ற எல்லையில் கடந்து கின்றது; இதுவே கடவுளின் உண்மைத்தோற்றம்.

36. உண்மையான உழைப்பாளிகள் மவுனமாகவும், பிறர் அறியாத வண்ணமாகவும் உழைத்து மவுனமாகவே போய்விடுகிறார்கள். அவர்கள் உண்மைக்காக உழைக்கிறார் களேயன்றி. பிறர் புகழ்வதற்கல்ல. மனித சமூகத்திற்காக உள்ளபடியே தங்கள் வாழ்நாளைக் கொடுத்தவர்கள் பலரானும். அதிக சமயங்களிற் காணுதற்கு முடியாமற் போய்விடு கிறார்கள். குணங்குடி மஸ்தான், வடலூர் இராமலிங்க வள்ளல் எங்கு சென்றார்க ளென்பதை விசாரித்துப்பார்; அவ்விதமானவர்களின் பருகல், உண்ணல், புணர்தல் முதலிய எல்லாச் செய்கைகளும் கடவுளுடைய ஆராதனை யாய் முடிகின்றது புணர்தல் முதலிய தீயசெயல்களும் எப்படி ஆராதனையாய் முடியும்? என்றாலோ, பக்தனவன் தன் சரீரம், தன் உயிர் முதலியவைகளைக் கடவுளுக் காகத் தத்தஞ்செய்து அவருடைய உடனுபோகமே பார்க் கிறான். ஆனதால் அந்தச் சரீரத்தாற் செய்யப்பெற்ற சர்வ கிருத்தியங்களும் அவருடைய தொழிலாக முடிகிறது. நீ அக்மல் ஷாஹிதின் உண்மையை கன்கறியாத வரையில் இது உனக்கு புலப்படாது.

திருவருட்பா.

ஒருமடந்தை வலிந்தணைந்து கலந்தகன்ற பின்ன
ருளம்வருந்தி யென்செய்தோ மென்றயர்ந்த போது
பெருமடஞ்சேர் பிள்ளையென் கெட்டதொன்று மிலகம்
பெருஞ்செயலென் றெனைத்தேற்றிப் பிடித்தபெருந் தகையே.

37. "கடவுளில்லாமல் நாமில்லை, நாமில்லாமல் கடவுளு மில்லை" என்னும் ஏகதியானத்தின் முதிர்ச்சியால் நிலை பெற்ற மேலான மூர்த்திகர பக்தியானது எவ்விதமான கருமமுயற்சியுமின்றிப் பிரபஞ்சக் கட்டிலிருந்து விடுவிக்கப் படுகிறது. அவ்விதமாறுக அன்பு செலுத்துபவர்களை எவ்விதமான கருமங்களும் மயக்குவதில்லை. விடாதீண்டப்

பெற்றவர்கள், கருடன் உருவத்தை விடாமல் சிந்தித்தால் விடம் நீங்கிப்பூரண சௌக்கியம் அடைவதுபோல், நீ உனது நிசசொரூபமாகிய கடவுள் வடிவை இடைவிடாமல் தியானித்து ஆனந்தக் கண்ணீர் பெருகும்படி பக்தி செலுத்து வாயேயானால் விடய சுகத்தால் ஏற்படும் சகல பந்தபாசத் துன்பங்களும் நீங்கி ஆன்ம சுகம் உண்டாகும். அவ்வாறுண்டாகும் பரமானந்தசுகத்தை அளவிட்டுச் சொல்ல எவரால் முடியும்? எதிர்பாராத ஆனந்தமும், ஆன்ம சுத்தியும் பெறுவாய்; மரணபயமும் தவிர்வாய்; காணுத காட்சி யெல்லாம் காணுவாய்.

திருவருட்பா.

பணிந்துபணிந் தணிந்தணிந்து பாடுமினே யுலகீர்
பரம்பரமே சிதம்பரமே பராபரமே வரமே
துணிந்துவந்த வேதாந்த சுத்தவஜ் ஜயமே
துரியமுடி யனுபவமே சுத்தசித்தாந் தமதாய்த்
தணிந்தநிலைப் பெருஞ்சுகமே சமரசசன் மார்க்க
சத்தியமே யியற்கையுண்மைத் தனிப்பொருளே யென்று
கணிந்தனைத்தே கனிந்துநினைந் தழைத்திடலப் பொழுதே
காணுத காட்சியெல்லாங் கண்டுகொள்ள லாமே.

38. ஒரு பரிசுத்தவானுடைய அதாவது ஒரு மகானுடைய சரிதையை அல்லது அவருடைய நன்னடக்கையைப்பற்றி நீ படிக்கும்போதாவது, கேள்விப்படும்போதாவது அது சமயம் உனக்கும் அவ்விதமான எண்ணங்கள் உண்டாகின்றது. ஒரு பரிசுத்தவீரிய புருஷன் தன் வாழ்நாள் முழுவதும் ஸ்திரமாக ஏறெடுத்துப் பார்த்ததேயில்லை என்று நாம் கேள்விப்படும்போது **நமக்கேன் அவ்வளவு திடமான புத்தியுண்டாக வில்லையென்று உன்னையே நிந்திக்கின்றாய்.** ஓரிடத்தில் தெய்வகன்னிகை போன்ற அதிசுந்தரமான ஓர் மாதைக்கண்டால், அவளை எவ்வாறுவது நாம் அடைந்துவிடவேண்டும் என்று துராசைப்படுகிறாய். ஆகையால் நீ பரிசுத்த வஸ்துவாகிய கடவுளைத் தியானஞ் செய்தால், உன்னிடத்திலுள்ள சகல மலங்களும் கழுவப்

பட்டுப் பரிசுத்தனுவாய். அசுத்த வஸ்துக்களே தியானஞ் செய்து கொண்டிருந்தால் உனது அந்தக்கரணங்கள் ஆபாசப் பட்டுக் கடவுளைக் காணமுடியாமல் மாயாரூபத்திற் சிக்கி வருந்துவாய்.

39. பிரபஞ்சமானது தெளிவான கண்ணாடிக்குச் சமானமாயிருக்கின்றது. நீ கண்ணாடியின் முன் சிரித்துக் கொண்டுபார்த்தால் கண்ணாடியிலும் உனது சிரித்த முகமே தோன்றும். அழுத முகத்தோடு நோக்கினால் அழுத முகமே தோன்றும். ஆனால் அது கண்ணாடியின் குற்றமா? அன்று. அது உன்னுடைய குற்றமேயாம். உண்மையான பக்தி செலுத்துபவன் தன் சரீரத்தைக் கடவுளுக்கு ஆலய (கட்டிட) மாகவும், தனது சித்தத்தை அவருக்குப் பீடமாகவும் சமர்ப்பிக்கிறான். அத்தகைய ஒரு மனிதனைப் பிரபஞ்சத்தவர்கள் வணங்கினால் அவன் தன்னை வணங்கினதாக எண்ணலாமா? அவன் தன் சரீரத்தையும், இருதயத்தையும், கடவுளுக்கு இடமாக சமர்ப்பிக்க, அவர் அதில் வசிக்கிற தன்மையால், அந்த மகானுடைய முகமும் இருதய கமலமும் பிரகாசிக்கிறது. அதைக்கண்ட ஏனையோர்கள் அந்த இருதய மூர்த்தியைக் குறித்து வணங்குகிறார்கள். வாழை நாரானது புஷ்பத்தோடு பொருந்தி யிருப்பதால் அதையும் சிரமேல் வகிக்கப்படுவதுபோல், ஆலயமானது தனக்குள் மூர்த்தியை நிலைபெறச் செய்திருப்பதால், ஆலயமதிலும் கோபுரமும் சேர்த்து வணங்கப்படுகிறது ஆலயமதிலையும், பீடத்தையும் தூரித்து எவராவது வணங்குவார்களா? ஒருபோதும் வணங்கமாட்டார்கள். ஆதலால் தன்னை வணங்கினதாகப் பாவிக்கப்படாது. அப்படி நினைக்கும் பட்சத்தில் நாளெல்லும் அந்தகாரமானது மூடித் தற்போத அந்தகாரத்தில் சிக்குண்டு வழிதெரியாமல் அலைந்து வருந்துவான்.

40. குளிர்ச்சியான பச்சை நிறமுள்ள விளக்கு அல்லது பச்சை நிறமான கொடி இவைகளைக் காண்பித்தால் அயரதம் (Train) வருவதுபோலவும், வெறுப்பான சிவந்த நிறத்தைக் காண்பித்தால் வராமல் நின்று கொண்டிருப்பது

போலவும் கடவுள் தன்மையுமிருக்கிறது. சாந்த குணமுள்ள வர்கட்கோ கடவுள் பிரத்தியட்சமாவார். கோபிகளுக்கோ சூனியமேயாம். பக்திசெய்கிற விஷயத்தில் காயைப்பற்றி ஒரு திருஷ்டாந்தமுண்டு. அதன் விபரமாவது சிலர் காயைக்கண்ட மாத்திரத்திலேயே நிந்தித்து வைது அடித்துத் துரத்திவிடுகிறார்கள். சிலர் அதனிடத்திலுள்ள சிறந்த குணங்களுக்காக ஆதரித்து வளர்க்கிறார்கள். எந்தப்பொருளையும் உருவைக்கண்ட மாத்திரத்தில் இகழ்ந்து விலக்கி விடக் கூடாது. "உருவகன் டெள்ளாமை வேண்டும்." என்னும் வள்ளுவர் வாக்கியத்தையும் கவனிக்க. பலாப் பழத்தின் மேலிருக்கிற முள்ளைக் கண்டு பயந்து, எவ்வளவு முட்களிருக்கிறது இது உதவாது என்று வெறுத்துத் தள்ளிவிட்டால், அதனுள்ளிருக்கும் மதுரமான சுளையை எவ்வாறு புசிக்க முடியும்?

41. முற்காலத்தில் சில பாட்டைசாரிகள் பசியைத் தணித்துக்கொள்ளக் கருதி, ஓர் அப்பக்கடையில் புகுந்து ஏதாவது பலகாரம் இருக்கிறதா? கொண்டு வாருங்கள் என்றனர். அப்படியே அந்தக் கடைக்காரனின் ஏவலாளர், இடியப்பம் என்னும் மிருதுவான பலகாரத்தைக் கொண்டு வந்து வைத்தனர். காகரிகந் தெரியாத அந்தப் பிரயாணிகள் அதைப்பார்த்து இதை எப்படிச் சாப்பிடமுடியும்? இப்படியே புசித்தால் தொண்டையில் மாட்டிக்கொள்ளாதா? சிக்கெடுத்துப் புசிக்கலாமென்றாலோ அதிக நேரமாகிவிடும். அது வரையிலும் பசியோடிருக்கமுடியாதே; நமது பசியை அறியாத இவ்வித மூடவியாபாரியும் இக்காலத்திலிருக்கின்றனே? என்று நிந்தித்து எழுந்து போய்விட்டார்கள். அந்த இடியப்பத்தின் தன்மையை உணராததினாலல்லவா? அப்படிச் சொல்ல நேர்ந்தது. ஆதலால்,

எம்பொரு ளெத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

காய்த லுவத்த லகற்றி ஒருபொருட்கண்
ஆய்த லறிவுடையோர் கண்ணதே.

என்ற வாக்கியங்களையுணர்ந்து, ஒரு வஸ்துவின் எதார்த்த மான குணத்தையே அவசியம் கவனிக்கவேண்டும். முத்தின்மேலிருக்கும் அவாவினால் முத்துச் சிப்பியை இகழாமல் வாங்கிச் சோதித்துப் பார்ப்பதுபோல், நாயினிடத்திலுள்ள மேலான குணத்திற்காக நாயைப்பற்றி ஆலோசிக்கவேண்டும். நாயானது ஜீவறிவுடைய நாற்கால் விலங்காயிருப்பினும், சிற்சில பாகங்களில் ஆறறிவினையுடைய மனிதரைப் பார்க்கிலும் சிரேஷ்ட சூட்சும புத்தியையுடைத்தாயிருக்கிறது. நாயானது தனது எசமான்பேரில் வைத்திருக்கிற விசுவாசத்திலும், தனது எசமான் எந்தரூபமாயிருந்தாலும் கண்டுபிடிக்கும் விதத்திலும் சிறந்தது. எப்படியெனில், ஒரு கடவை ஒரு மனிதன் தனக்கு ஏதாவது கின்பண்ட முதலியவைகள் கொடுத்திருப்பானையாகில், அவனைத் தன் ஆயுளுள்ளவரையில் மறப்பதேயில்லை. தனது எசமான் காலத்திற்குத்தக்கபடி எவ்விதமான வெவ்வேறு ஆடையாபரண அலங்கிருதனுக பல்லாயிரஞ் சனங்கள் நெருங்கிய ஒரு பெரிய கூட்டத்தில் காணப்பட்டாலும், அவனைத் தன் எசமானென்று நிச்சயமாய்க் கண்டுபிடித்து விடுவதுடன், தன்னுடைய நன்றியறிதலை எசமானுக்குக் காட்டும்பொருட்டு, தனது வாலைக் குழைத்துக் குழைத்து ஆட்டி ஒருவிதமான தொனியுடன் சமிக்கை பண்ணுகிறது.

42. சகல விவேகமும் பொருந்திய பகுத்தறிவுள்ள மனிதர்களை ஆலோசிக்குமிடத்தில், எ ணும் புகடை என்பத்து நான்கு நூறாயிரம் சீவராசிகளையும், சிருட்டித்து அவைகளை பரிபாலனஞ் செய்துவரும் அருட்டாயும் கருணைநிதியுமாகிய சர்வ சீவ தயாபரக் கடவுளைப்பற்றி பெரும்பாலும் நினைப்பவர்கள் மிகச் சொற்பமென்றே தைரியமாய்ச் சொல்லுவோம். "பட்டினத்தார் அன்ன விசாரம் அதுவே விசாரம்" என்ற செய்யுட் கருத்தின்படி வயிற்றுக்குச் சரியான ஆகாரம் கிடைக்காத வேளைகளிலும், வியாதியஸ்தராயிருக்கும்போதும், வேறெவ்விதமான இடுக்கண்களிலும் ஆ கடவுளே! இப்படி என்னைச் சோதிக்க

லாமா? சிலபேர் பாக்கியவந்தராய் உண்டுடுத்துப் பூண்டு சௌக்கியமாயிருக்கவும், நான் மாத்திரம் இப்படிக் கஷ்டப் படவும் செய்தாயே? இது ஞாயமா? என்று மனம் வேறு, மொழி வேருகப் பிதற்றுவார்கள். வயிறு பருக்க ஆகாரம் கிடைத்துவிட்டால் 400-500 ரூபாய்கள் நமது கைபி லில்லையே யென்று சஞ்சலப்படுவார்கள். கொஞ்சந் திரவியஞ் சேர்ந்து விட்டாலோ அடிக்கடி அதை எண்ணி எண்ணிப் பார்த்து பெருமூச்சுவிட்டு, எங்கே திருடர்கள் அபகரித்துக்கொண்டுபோய் விடுவார்களோ என்று இரவெல் லாம் அதே சிந்தனையால் பாதி நித்திரையும் பாதிவிழிப்பு மாகப் பதறிப் பதறி இராக்காலத்தைப் போக்கிக் கொண்டி ருப்பார்கள். பகற் காலங்களில் அந்தத் திரவியங்களை விருத்திசெய்வதிலேயே நேராக்கமாய் இருப்பார்கள். நல்லோர்கள் வந்தாலும் இப்போது சமயமில்லை போய் வாருங்கள் என்று சுடுமொழி புகல்வார்கள். சுருக்க மாய்ச் சொல்லுமிடத்தில் கொண்ணூற்றொன்பது ரூபாய் சேர்ந்திருந்தால் அத்துடன் ஒரு ரூபாயை எவ்விதத்திலாகி லும் சேகரித்து நூறு ரூபாயாக்குவதில் கவலையுற்றவர் களா யிருப்பார்களேயன்றி, தானதருமத்தையும் கருணையங் கடலாகிய கடவுளையும் சிந்திக்க மாட்டார்கள். இது காரணத்தினாலேயே நீர்க்கதரிசியாகிய நபிமார்களும், ஞாயன் மார்களாகிய அறுபத்துமூவர்களும், செல்வத்தை தேய வேண்டாமென்று நிராகரித்திருக்கின்றனர்.

43. நீ கடவுளின் மீது பக்தி செலுத்தும் ஆரம்பத்தி லேயே அவரிடத்தில் ஏதாவது ஒரு பிரயோசனத்தை விரும்பி அந்த வரத்தைக்கொடு இந்த வரத்தைக்கொடு என்று விரும்பி மன்றாடிக் கேட்காதே? நான் தேவரிருடைய திருவருளுக்குப் பாத்திரவானுக வேண்டும். உள்மையுள்ள வேண்டும். உம்மில் கலக்கவேண்டும் என்ற ஏக பாவனை யாக அன்பு செலுத்தவேண்டுமேயன்றி, ஆண்டவரே எனக்கு ஆண்குழந்தை பிறந்தால் என் தகுமபிரையும், தாடமபிரையும், என் பிள்ளை தகுமபிரையும், வேணுமென் றால் என் பெண்சாதியின் தகுமபிரையும், சேர்த்து தங்கள்

சன்னிதானத்தில் சமர்ப்பிக்கின்றேன் என்று சிலர் பிரார்த்தனை செய்துகொண்டு மஹரிஷிகளைப்போல், தாடி தலைமயிரை வளர்க்கிறார்கள். இவர்களுடைய தலைமயிரானது கடவுளுக்கு அவ்வளவு அவசியமா? கடவுள் தன் கன்றுக்குட்டிக்குக் கயிறு திரிக்கப் போகிறார் போலும். ஆகையால், அந்தமாதிரி நீ ஒன்றும் காமியமாகப் பிரார்த்தனைகள் செய்துகொள்ளாதே. எனக்குப் புதையல் கிடைத்தால் அதில் எட்டிலொரு பங்கை உமது சந்நிதி உண்டியலில் கொண்டுவந்து போடுகிறேனென்றும், எனக்கு லாட்டரியில் முதல் பிரைஸ் விழுந்தால் உமக்கு உற்சவம் நடத்தி வைக்கிறேனென்றும், வர்த்தகத்தில் கூடுதலான இலாபம் கிடைத்தால் மூன்மண்டபம் கட்டிவைக்கிறேனென்றும், உயர்ந்த உத்தியோகம் கிடைத்தால் தங்கவிளக்குச் செய்து கொண்டு வருகிறேனென்றும், என் வியாதி தீர்ந்தால் ஒரு பசுமாடு வாங்கிவிடுகிறேனென்றும் சிலபேர் பிரார்த்தனை செய்துகொள்வதுபோல், நீயும் அறியாத்தன்மையால், காமியமாக எந்தப் பிரார்த்தனையும் செய்துகொள்ளாதே. பக்தி முதிர்ச்சிபெற்றபின்னும் கேட்கப்படாது. நாம் நமது எதார்த்தவடிவமாகிய பரமார்த்த சொரூபத்தை அனுதினமும் மனக்கண்ணால் தெரிசித்துப் பணிந்துவந்தால், கடவுள் நமக்குச் செய்யவேண்டிய பிரதியுபகாரமாகிய திருவருட்சத்தியை நமக்கே சுதந்தரமாகக் கொடுத்துவிடுவார். அப்போது சமுத்திரத்தினூடு செல்லும் நீராவி மரக்கலத்தை மானுஷியானவன் தான் நினைத்தபடி எந்தத் திசைக்குநேராக வேனுந் திருப்பிக்கொள்வதுபோல், திருவருட்சத்தி மேலிட்டபின், தான் எந்தக் காரியங்களையும் செய்வதற்கு வல்லமையுண்டாகும்.

44. உன்னுள்ளமூர்த்திக்கு உறவுடையதான நிட்காமிய அன்பையே தேடிக்கொள். சமீபத்தில் உன் பேரறிவை அது கொடுக்கிறது. உன் பக்தி வழியில் கனப்பைத்தந்து உன்னை அடிக்கடி தவறி நடக்கும்படியும் செய்கிற உன் சுபாவவிருத்திக்கு மாறாக, ஓர் நிலையில் நின்று அவருக்குத் தொழும்புசெய்யப் பிரயாசைப்படு. அவ்விதம் செய்யும்

உள்ளத்தின் மேலே அப்பியாச (பழக்க) த்தில் அம் மூர்த்தி உனக்கோர் அன்புள்ள தந்தையாய்க் காணப்படுகிறாரா? அப்படியானால் அவரை உன் உண்மைக்குரிய தந்தையாகச் செய்துகொள். பின் இவ்வுலகத் தந்தைபினும் அதிக நெருக்கமாய் எல்லாவற்றிற்கும் அவருதவியையும் உத்திரவையும் எதிர்பார்த்திரு. அப்படியின்றி, உன்தாயாரைப் போல் மிக்க அன்பாய்த் தோன்றினால் இன்னும் அதிக நெருக்கமாய்க்கூட நீ அவரை எடுத்துக்கொள்ளலாம். ஏனெனில் கருணையில் தாயார் என்ற கருத்தில் வேறெந்த பந்துவும் கொண்டு வருதற்கியலாத ஓர் சமீபவுணர்ச்சி வருகிறது. தகப்பனருடன் என்றாலோ! ஒருவூர்த் தாய் ஒன்பதூர்த் தகப்பன் என்ற முறையில் சில சமயங்களில் பயம். தாயார் என்றால், குழந்தை தான் தவறிழைத்திருந்தாலும் தாராளமாய்ச் செல்லுகிறான். ஏனெனில் எப்பொழுதும் அவள் அன்பு பாராட்டுகிறாள். பிழைகளை மன்னிக்கிறாள். நன்றாய் ஆதரிக்கிறாள். ஆகையால் அவள் உள்ளபடி தன்னை தண்டிக்கமாட்டாள் என்றறிகிறான்.

45. நிட்காமியமாகச் செய்யப்படும் தலைமையான பேரன்பு செலுத்துபவர்களது இதய பதுமாசனத்திலேயே கடவுளானவர் சதா வசித்துவருவார். காமியமாக ஏதாவதொன்றை நீ அவரிடத்தில் விரும்பி எதிர்பார்க்கும் காலம் வரையில் வாஸ்தவத்தில் அவருக்கு அன்பு செலுத்த நீ ஒரு போதும் முடியாது. நீ பாவிக்கும் எதார்த்த வடிவமாகிய சொரூபமூர்த்தியும், கள்வர்கையில் சிக்கியவன், தெய்வ கதியால் தப்பிக்கின் வெகுதூரத்தில் ஓடிப்போவதுபோல் உனக்கு வெகுதூரத்தில் விலகிவிடுவார். ஆதலால் நீ உண்மையாக நிராசையுடன் விசுவாசித்து வருவாயாகில் அவரால் உனக்குச் செய்யவேண்டிய காரியங்கள் ஏதேனும் உளவாயின் அவர் உனக்குச் செய்வதற்கு முன்பின் யோசிப்பாரா? ஒருபோதும் யோசிக்கமாட்டார். சாதாரணமாக மனிதனுக்குச் செலுத்திய அன்புக்கே பிரத்தியட்சமான சித்திகள் ஏற்படுகிறபோது, முழுமுதற் கடவுளாகிய பரம கருணைநிதிக்குச் செலுத்திய அன்பினால் கிடைக்கும்

ஊழியத்திற்கு கங்கு கரை யுண்டோ? எம்னையுஞ் செயிக்கப் படுமென்றால் மற்ற இலாபத்தைப்பற்றி நீ கேட்க வேண்டியதே யில்லை.

தாயுமானவர்.

அன்பைப் பெருக்கியென தாருயிரைக் காக்கவந்த
இன்பப் பெருக்கே யிறையே பராபரமே.

இவ்விதமான பக்தி செலுத்துவதற்கு நாட்டைக் கடந்து காட்டுக்குப் போகவேண்டுமென்பது சுத்தத்தவறு. உண்மையான பக்தியை விடாமல் தினந்தோறும் அநுஷ்டித்து வரும் அன்பர்களுக்கு இடத்தின் வித்தியாசமும் ஆடம்பரமும் நானென்னும் அகம்பாவமும் கிடையாது.

46. உன் வேலையை சிலாகித்துப் புகழ ஒரு வரு மில்லாத அவ்விடமே, உன்னை உற்சாகப்படுத்த ஒரு மனிதனுமில்லாத அவ்விடமே, ஒவ்வொருவரும் உன்னை வெறுக்கும்படியான அவ்விடமே, நிறைசாந்தி; முடிவற்ற மனோலயம்; பயமற்ற உழைப்பின் நிச்சயம் நிறைந்துளது. உன் மனோதியான இஷ்டமூர்த்தியைக் குருவடிவத்திலும், தன் சூக்கும வடிவத்திலும், தன் மனதுக்கிசைந்த...திவ்ய (அக்காரமாற்று) மூதலான வடிவத்திலும் பார்ப்பதில் ஒரு வேலை உன் சுபாவம் உன்னைக் கடந்தும் எழலாம். இதை விட அதிக உயர்வும், பரிசுத்தமுமான பந்துவே யில்லை. எனெனில் கபடற்ற தன்மையின் பேராழமும் சுயகலங் கருதாத தாயின் அன்பும் இதில் ஏராளமாயிருக்கிறது. இப் படியான அன்பின் கடலில் நீ எவ்வளவு ஆழமாய் மூழ்கு கிறாயோ அவ்வளவு உயரமாய் ஞானத்தில் எழுகிறாய். உண்மையான ஞானத் தாயின் அன்பு பொருந்தியவனாக உன் தெய்வ வடிவத்தைச் சூழ்ந்துகொள். எப்பொழுதாவது உன்னைத் துணிந்து எட்டிவரக்கூடிய துன்பமுமில்லை. உன் சொந்தக் குழந்தையைப்போல் அவரைக்கவனி.

47. இந்த விதமான எந்தக் குறிப்புகளிலாவது உன் உண்மைப் பக்தி யெழும்போது, அவ்வுறவு அப்படியே

உண்மையாகி, அன்பும், ஆராதனையும் சுபாவமாகவே இருதயத்திலிருந்து உன் இஷ்ட மூர்த்தத்தை நோக்கிப் பெருகி ஓடுகிறது. நீ இலட்சியம் வைத்துள்ள கடவுளை வணங்காமலும் உண்மைப் பக்தி இருக்கவும் கூடும். நிர்ச்சலமாகவும் தீவிரமாகவும் உன் உள்ளத்தின் உண்மையை ஆராய்வதனால் நீயுங்கூட பக்தி செலுத்துவோனே. இருப்பினும், நீ எந்த விதப் பெயரிட்டழைத்தாலும் உன் மனோரத மூர்த்தியிடம் நீ பூரண அன்பைவைத்திரு. அவரிடம் நன்றியறிந்தவனாகவும், சுயநலங்கருதாதவனாகவும், பரிசுத்தமுள்ளவனாகவும், ஊழியஞ்செய்; நீ உண்மையான அன்பை அடைவாய். இதுதான் அன்பின் முடிவு.

## துன்பம்போல் இன்பம்.

48. கடவுள் உனக்குச்செய்கிற நன்மைக்காக அன்பு பாராட்டுவதுபோல அவர் செய்கிற துன்பமான காரியத்திற்கும் நீ அன்பு பாராட்டு. ஏனென்றால் மனிதர்கள் தமக்குத் துன்பம் நேரிடுகிற காலத்திலேயே மூரணனை தூர்ச்சிந்தனைகளை விட்டு விலகி, நியாயமான காரியங்களில் பிரவேசிக்கிறார்கள்; பிறர்துக்கம் இத்தன்மைத் தெனவும் உணருகிறார்கள். கஷ்டம் ஏற்பட்ட காலத்திலேயே கடவுள் மீது அன்பு பாராட்டுகிறார்கள். சுற்றுப் பக்கங்களிலாவது, தான் வசிக்கும் கிராமத்திலாவது வாந்திபேதி (cholera) ஏற்பட்டுவிட்டால் இஸ்லாமியர்கள் தெருத் தெருவாய் பைத்துகள் (பஜனை) ஓதிக் கடவுளைத் தோத்திரம் செய்கின்றனர். அந்தக் காலத்தில் ஐந்து வயதுக் குழந்தை முதல் அதிக விருத்தாப்பியர்கள் வரையில், எங்கே தன்னுயிர் நீங்கிவிடப் போகிறதோ என்று பயந்து, பள்ளிவாசலில் இடமில்லாதபடி வந்து கூடித்தொழுகின்றனர்; நீண்ட துஆ ஓதுகின்றனர்; மிக்க பக்தியுள்ளவர்கள்போல் நடிக்கின்றனர். பொழுது அத்தமிப்பதற்குள் அறைக்குள் நுழைந்துகொண்டு சுசிகரத்துடன் கடவுள்மீது அன்பு செலுத்துகின்றனர். சில இந்துக்களோ அப்போதுதான்

காளியம்மனுக்கு அபிஷேக ஆராதனை, அக்கினிக்கப்பறை முதலிய தடபுடலான விசேடங்களைச் செய்கிறார்கள்.

மார்கழி மாதமானது பீடைமாதமென்றும், அந்தக் காலத்திலேயே வாந்திபேதி ஏற்படுகிறதென்றும் கருதி தெருத்தெருவாய் பஜனைக் கோஷ்டிகள் கிளம்பிவிடுகிறது. மற்றமாதத்தில் பஜனைகோஷ்டிகள் தெருவில் வராததற்குக் காரணமும் அதுவேபோலும். வைசூரி நோய் பரவிவிட்டாலோ இது மாரியம்மன் கொடுமையென்று அபிஷேகஆராதனைசெய்கிறார்கள். தாலுக்கா போர்டார்களும், நகரபரிபாலனசபையார்களும் ஏராளமான விளம்பரங்களைப் பிரசுரித்து ஜனங்கள் சுசீகரமாயிருக்கும்படி எச்சரிக்கை செய்கின்றனர். அதனால் ஜனங்கள் நன்மை தீமைகளை யுணருகின்றனர்; தானதருமங்களையும் புரிகின்றனர்; வீடுகளைச் சுத்தம் செய்கின்றனர். இவைகளெல்லாம் நிகழ்வது, கடவுள் கண்டிப்பதினால் ஏற்படுகிற நன்மையாம். ஆதலால் கடவுள் உனக்குத் துன்பத்தைத் தருவதானது நன்மைக்குக் காரணமென்றுணர்ந்து, துன்பம்வந்த காலத்திலும் அவரை நிந்திக்காமல், அவர்மீது இன்னும் அதிகமான அன்பைச்செலுத்து. தங்களுக்குத் துன்பம் நேர்ந்தகாலத்தில் சிலர் கடவுள் மகிமையை அறியாமல் அவரை நிந்திக்கின்றனர்.

மாதா பிதாக்கள் தாங்கள் அருந்தவம் செய்து பெற்று வளர்த்த அருமைச் சிறார்கள் தங்கள் சொற்படிகேட்டு நடக்காத விடத்து, இளங்கொம்பினால் அடித்து பயமுறுத்துவதும் அன்பே காரணமாகும். வியாதியாயிருக்கின்ற தன் குழந்தைக்கு தகப்பன் கசப்பான மருந்தைவாங்கி அருந்தச் செய்வது குழந்தையினுடைய வியாதி நீங்குவதற்காகவல்லவா? வைத்தியன் சில வியாதிகளினால் வந்த கட்டி முதலானவைகளை கூரிய கத்தியால் கீறி, சீழ் முதலிய அசுத்தங்களை வெளியேற்றி சௌக்கியப்படுத்துவது பிற உயிர்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்ற நோக்கமேயல்லாது தீமை செய்யவேண்டுமென்றல்லவே?

வஸ்திரத்தைக் கல்லில் ஓங்கி ஓங்கி வண்ணன் அடிப்பது வஸ்திரத்தைக் கிழித்துவிட வேண்டுமென்ற நோக்கமா? அன்று; வஸ்திரத்தின் அழுக்கைப்போக்குவதற்கே.

பொன்னை நெருப்பிலிட்டுக் கம்மியர்கள் காய்ச்சுவது பொன்னிலுள்ள களிம்பை யகற்றுவதற்காகவன்றே? அவ்வாறே கடவுள் உனக்கு நிக்கிரகமாகிய துன்பமுண்டாகும் படியான தண்டனையைக் கொடுக்கிறார். அந்தத் தண்டனையானது நீ நன்மையடையும் பொருட்டேயாதலால் அதனை நீ பொறுமையோடு ஏற்றுக்கொள். எல்லாம் அன்பே!

## அன்பும் - அச்சமும் (பய-பக்தி)

நமது முழுமுதற் கடவுளாகிய பரம கருணாநிதியின் திருவருளைப் பெற்றுய்வதற்கு அன்பும், அவ்வன்பு முதிர்ப்பதற்கு அச்சமும் அத்தியாவசியமாகிறது. அன்பு ஒன்றிருந்தால் போதுமே! அச்சம் எதற்காக எனச் சில சாரார் கேட்கலாம். அன்பென்னும் விதையை அச்சம் என்னும் பூமியில் பதித்து ஆனந்தபாஷ்பம் என்னும் கண்ணீர் வார்க்கப் பெருவிடின் அங்குரமாகிய முதல் தோன்றி அருளென்னும் மணிபிடித்து விளையமாட்டா

அன்பிற்கு உபபலமாகிய அச்சம் நமக்கு ஏற்பட்டு, அவ்வச்சமேலீட்டால் சரீரத்திலுள்ள உரோமக்கால்கள் சிலிர்க்க, சரீரமானது வாட்டமுற்றுக் குழைய, எலும்புகளெல்லாம் நெக்கு நெக்காக நெகிழ்ந்துடைய, மனமானது அக்கினியிலிட்ட மெழுகுபோல் இடையறாதுருகி இருகண்களினுமிருந்து விடா மழையைப்போலும், மணற் கேணியைப்போலும் ஆனந்தபாஷ்பமானது வெதும்பிச் சொரிய, ஆண்டவனுடைய கலியாண குணங்களைப் பலகால் சிந்தித்து மனமானது படபடத்து நடுநடுங்கிப் பரவசமேலீட்டால் கண்ணே! கருத்தே! எண்ணே! எழுத்தே! பொன்னே! பொருளே! அன்னே! அரசே! முத்தே! மூதலே! சித்தே! திருவே! என்று பலவாறு துதித்துப்பாடி! ஆடி! ஆர

வாரித்துக் குதித்து அன்பினால் மூர்ச்சைபடைந்த மெய் யன்பர்களுக்குக் கடவுள் சந்நிதானம் அதிக தூரமில்லை. ஆகலின் அன்பு செலுத்துவதற்கு பயபக்தி என்று வழங்கா னின்ற அச்சமும் வேண்டற்பாலதே.

அச்சமென்பது உனது இருதயத்திலிருந்து செனிக் கிற நிலைமைகளில் ஒன்றும். உனக்கேற்படும் அபாயத்தை உணர்வதனால் அச்சம் பிறக்கும். அது அற்பம், மிதம், அதிகம் என மூன்று விதத்தை யுடைத்தாயிருக்கிறது. இவற்றுள் அற்பம் அதிகம் என்னும் இரண்டச்சங்களும் கெட்டவைகள். மிதம் என்னும் அச்சமே பயனுடைத்து. அற்பம் என்னும் அச்சத்தினால் தவமுயற்சியும் மன வைராக்கியமும் ஏற்படாமல் சபலச் சித்தமே செனித்துக் கொண்டிருக்கும். அதிகம் என்னும் அச்சத்தினால் பிணி, மூப்பு, சாக்காடு, பிரக்ஞை மாறுதல் இவைகளின் சந்தேக மும், நிராதரவின் பயமும் ஏற்படும். ஆகையால் இவ்விரண்டு அச்சங்களும் ஆன்மலாபத்திற்கு அன்பு செலுத்தப் பயன் படா. மிதம் என்னும் அச்சமே பாவ கருமங்களைப் புரியாமல் வணக்கத்தில் ஆழ்ந்து விடும்படி சித்தத்திற்கு அதிக உறுதி யைக் கொடுக்கும். நடுத்தரமான இம் மித அச்சத்தையே அன்பர்கள் கைக்கொண்டு, அருட்பரமானந்த நிலையைப் பெற்றுய்ய வேண்டும்.

## அச்சத்தின் காரண-காரியம்.

உன் இருதயத்திலிருந்து செனித்த அச்சமானது ஓர் நெருப்புக்குச் சமானமாகிறது. அந்த நெருப்புக்கு காரணமும், காரியமும் உண்டு. காரணமென்பது கல்வியும், ஞானமும், (இல்லாமும், மறைபொருளும்), காரியமென்பது உலக இச்சைகள் வேப்பங்காய்போல் உனக்குக் கசப்பாகத் தோன்றுவதும், அவைகளின்மீது உனக்கு இலட்சியமில் லாமற் போவதுமேயாம்.

அச்சத்தின் காரணம்: மறுமையினுடையகாரியத்தின் அபாயங்களை உணர்ந்துகொள்ளுதலும், உன்னுடைய கேட்டுக்குக் காரணமாயிருப்பவைகள் உன்னிடத்தில் பிரத்

தியட்சமாகவும், அதிகமாகவும் இருப்பதை உணர்ந்து கொள்ளுதலுமாம். இவ்வாறு உணர்ந்துகொள்வாயாகில் உன்னுடைய இருதயத்தில் அச்சமென்னும் அக்கினியானது சுவாலித்து எரிந்து உனது இருதயம் கண்ணாடி போல் பரிசுத்தமாகும்.

அச்சத்தின் காரியம்: நீ ஒரு புலியிடத்தில் சிக்கிக் கொண்டாலும், அல்லது ஒரு கொடிய துஷ்டனிடத்தில் அகப்பட்டுக்கொண்டாலும் உணவு, போகம் முதலான உலக இச்சைகளெல்லாம் மறந்துபோய், உன் மனோநிலைமையானது கேவலமும், தாழ்மையும் அடைந்து, உன் முடிவைப்பற்றிய கவலையில் அதே யோசனையும், அதே எண்ணமுமாக இருப்பாய். பெருமை, பொருமை மறதி முதலான வைகள் உனக்கு அப்பொழுது தோன்றவேமாட்டா. அது போல் உனக்கேற்படப்போகிற மரணமுதலான ஆபத்தை நினைந்து ஆண்டவனுக்கு பயப்படுவாயாகில் உன்னிடமுள்ள தீய குணங்கள் மாறி அன்புமேலிட்டு பரிசுத்தம் அடைந்து ஆன்மலாபப் பெருவாரியில் திளைப்பாய்.

நபிகள் நாயகம் அவர்களும், பிரதம தேவதூதராகிய ஜிப்றயில் (அலை) அவர்களும் ஒரு சமயம் அழுதுகொண்டிருந்தார்கள். அப்போது ஆண்டவனிடமிருந்து "நீங்கள் ஏன் அழுதுகொண்டிருக்கிறீர்கள்! நான் உங்களை அச்சந்தீர்ந்தவர்களாக ஆக்கியிருக்கிறேனே? என்று தேவவசனம் (வஹி) வந்தது. அதற்கவர்கள் எங்கள் நாயகனே! உன் திருவுளம் எவ்வாறிருக்குமோ என்று நாங்கள் அச்சந்தீரவில்லை என்றார்கள். அதற்கு "நீங்கள் அச்சந்தீராதவர்களாகவேயிருங்கள்" என்று ஆஜ்ஞாபிக்கப்பெற்றது. அச்சந்தீர்ந்திருக்கும்படி இவர்கட்கு உத்திரவிடப்பெற்றிருந்தும், "அப்படியிருப்பது தவறு; ஒருவேளை கடவுள் நமது மனதைச் சோதிக்கும் சோதனையாகவு மிருக்கலாம். இதனுண்மை இன்னதென்று நாம் தீர்மானித்துவிடக்கூடாது" என்று சொல்லிக்கொண்டார்களாம்.

## திருநபி வாசகம்.

"கடவுளுடைய அச்சத்தினால் அழுதவன் நரகத்திற்குப்போக மாட்டான். எவன் தன்னுடைய பாவங்களை நினைத்து அழுது மன்னிப்புக் கேட்கிறானே, அவன் தீர்ப்பு (கியாம) நாளையில் கேள்வி கணக்கில்லாமல் சுவர்க்கம் புகுவான். கடவுளுடைய அருளின் நிழலில் இருப்பவர்கள் ஏழு பேர்கள். அதில் ஆண்டவனைத் தன்னந்தனிமையாயிருந்து நினைந்து, அழுத கண்ணீர் சிந்தினவர்கள் அந்த எழுவர்களில் ஒருவர்" என்பது றசூலே குதா அவர்கள் திருவாக்கியம்.

எனக்கு அச்சம் மேலிட்டிருந்த ஒருகாலிலாவது என் மனதில் நுண்ணறிவும், ஆராய்வுமான வாசல் திறக்காமலிருந்ததில்லை என்பது ஷிப்லி (றஹ்) அவர்கள் திருவசனம். கடவுளை நினைந்து அழும்போது வடியும் கண்ணீரை முகத்தின் மீது தடவிக்கொண்டால் கண்ணீர் பட்டவிடம் ஒரு போதும் நரகத்தில் பற்றியெரியாது என்பதாகக் கேள்விப் பட்டிருக்கிறேன் என்பது முஹம்மதிபுனுல் முன்கதிர் (றஹ்) அவர்கள் கூறிய அமுதமொழி. நீங்கள் அழுது கொண்டேயிருங்கள். அப்படிச்செய்ய முடியாமற் போனால் உங்களுக்கு அழுகை வரும்படி செய்துகொள்ளுங்கள் என்பது அபூபக்கர் சித்தீக்கு (றலி) அவர்களின் திருவாக்கியம். ஆயிரம் தங்கக்காசுகளைத் தானதருமஞ் செய்வதினும், என் முகத்தில் கண்ணீர் வடியும்படி நான் அழுவது கடவுளின்மீது சத்தியமாக எனக்கு மிகவும் ஆனந்தம் என்பது கலீபுல் அஸ்பார் (றலி) அவர்களின் முதுமொழி.

இகத்தில் அச்சத்தைத் தவிர்த்து பரத்தில் அச்சமுண்டாகும்படி போதிப்பவர்களுடைய நட்பை விரும்பாமல், இகத்தில் அச்சமுண்டாகும்படிசெய்து, பரத்தில் அச்சந்தீரும்படி போதிப்பவர்களுடைய நட்பையே தேடிக்கொள்ளுங்கள் என்று தங்கள் நண்பர்களுக்கு ஹசன் பசரீ (றஹ்) அவர்கள் உபதேசித்திருக்கிறார்கள் என்று கீமியாயெ ஸஆதத்தில் கூறப்பெற்றிருக்கிறது.

அன்பென்னும் பரம்பொருள் நிலைபெற்றிருப்பதற்கு அச்சமானது ஓர் தான (மக்கா) மாக விளங்குகிறது. அத்தகைய அச்சமானது பெரும்பாலும் கல்வி, கேள்வியுள்ளவர்களிடமே தலைமைபெற்றுப் பிரகாசிக்கிறது. ஆண்டவனுக்கு பயப்படுகிறவர்கள் அவரது அடியார்களில் கல்வி அறிவு (இல்மு) உள்ளவர்களே என்று குர் ஆனில் கூறப்பெற்றிருக்கிறது. "கடவுளுடைய அச்சமானது நுண்ணறிவுக்கு மூலம்" என்பது நபிகள் நாயகம் அவர்கள் திருவசனம். அச்சத்தின் பலனுவது ஆசையறுதலும், பேணுதலுமேயாம். இச்சையென்னும் மூட்காட்டை அச்சமென்னும் நெருப்பு எரித்துவிடுவதுபோல் வேறெதுவும் அவ்வளவு துரிதமாக எரித்தற்கியலாது.

அச்சமுள்ளவர்கள் நேர்வழியை (ஹிதாயத்தை) யும், கிருபையை (ரஹ்மத்தை) யும், அறிவை (இல்மை) யும், பொருத்தத்தை (ரிலாவை) யும் ஒருங்குசேர்த்து குர் ஆனில் மூன்று ஆயத்துக்களில், (1) யார் ஆண்டவனுக்குப் பயப்படுகிறார்களோ அவர்களுக்கு ஹிதாயத்தும் ரஹ்மத்துமுண்டு. (2) நாயகனுக்குப் பயப்படுகிறவர்கள் இல்முள்ளவர்களே. (3) பிரமம் சிவர்களையும், சிவர்கள் பிரம்மத்தையும் பொருந்தி சிவப்பிரம்மைக்கியம் பெறுவார்கள். இந்தப் பொருத்தம் கடவுளுக்குப் பயந்து உள்ளச்சம் கொண்டவர்களுக்கே வாய்க்கும் என்று கூறப்பெற்றிருப்பதுடன் உங்களில் உள்ளச்சம் (தக்வா) உள்ளவனே கடவுளிடத்தில் மதிப்புள்ளவன் என்றும் கூறப்பெற்றிருக்கிறது.

கடவுளானவர் தனது பராக்கிரமத்தின்மீது ஆணையிட்டு, நான் ஒரு மனிதனில் இம்மை, மறுமையினது இரண்டு அச்சத்தையும், இரண்டு அச்சந்தீர்தலையும் ஒருங்கே சேர்க்கமாட்டேன். இம்மையில் (துனியாவில்) எவன் எனக்குப் பயந்தானோ அவனே மறுமையில் (ஆகிரத்தில்) அச்சம் தவிர்ப்பேன். இம்மையில் எவன் அச்சந்தீர்ந்திருந்தானோ, அவனே மறுமையில் அச்சமுண்டாகும்படி செய்வேன் என்று கூறியதாக நபிகள் நாயகம் அவர்கள் திருவசனம்.

யார் சதா கடவுளுக்குப் பயப்பட்டு வழிபடுகிறார் களோ, அவர்களுக்கு எல்லாப் பிராணிகளும் பயப்பட்டு ஏவல் கேட்கவும், எவன் கடவுளுக்குப் பயப்படவில்லையோ அவன் எல்லாப் பிராணிகளுக்கும் பயப்படும்படியாகவும் கடவுள் செய்வார்.

சீலமான (முமீனான) ஒருவர் கடவுளை நினைத்து நினைத்து உருகி தன் கண்களிலிருந்து ஒரு துளி கண்ணீர் வரும்படி அழுவாராகில் அவர் முகம் நரகத்திற்கு விலக்கு (ஹராம்) ஆகாமற் போவதில்லை. எந்த அடியானுக்கு ஆண்டவனுடைய அச்சத்தினால் சரீரத்திலுள்ள உரோமம் சிலிர்த்து, மனதில் திகிலுண்டாகிறதோ அவர்களுடைய பாவமானது மரத்திலிருந்து உதிர்ந்த இலைகளைப்போல் உதிர்ந்துபோகும்.

பிரதம தேவதூதராக (மலக்காக) இருந்த இபுலீசு கடவுளுடைய மூனிவை (லகுனத்தை) அடைந்தபோது அதற் கடுத்த பதவியிலிருந்த ஜிப்றயீல்-மிக்காயில் என்னும் தேவ தூதர்கள் இருவரும் ஓயாமல் அழுது கொண்டிருந்தார் களாம். அதற்குக் கடவுள் "ஏன் அழுகிறீர்கள்" என்று கேட்க, "நாயகனே! உன்னுடைய சித்தம் எவ்வாறோ என்று அழுகிறோம்" என்றார்கள். அப்படியே அச்சம் தீராதவர்களாயிருங்கள் என்று ஆக்ஞாபிக்கப்பெற்றது.

தேவதூதராகிய "ஜிப்றயீல் (அலை) என்னிடம் வந்த ஒரு நேரத்திலாவது ஆண்டவனுடைய பயத்தினால் அவர் சரீரத்தில் நடுக்கமில்லாமலிருந்ததில்லை" என்பது நிருபி வசனம். "மீக்காயில் ஒருபோதும் சிரித்ததாக நான் கண்டதில்லையே" யென்று ஜிப்றயீலிடம் நபிபெருமான் கேட்க, அதற்கவர்கள் "நரகத்தைப் படைத்தது முதல் அவர் சிரித்ததேயில்லை" என்று கூறியதாக அனஸ (றலி) அவர்கள் அறிவித்த வசனம் கூறப்பெற்றிருக்கிறது. இபுறாஹீம் கலீலுல்லா (அலை) அவர்கள் தொழுக ஆரம்பித்துவிட்டால் அவர்கள் மனக்கொதிப்பின் இரைச்சல் சிலதூரம் வரையில் கேட்குமாம். தாவூது (அலை) அவர்கள் நாற்பது நாள்

வரையில் தலையை வணங்கிப் பூமியில் வைத்துச் சிரவணக்கம் (ஜஸ்தாச்) செய்து அழுதுகொண்டிருந்தார்கள். அந்தக் கண்ணீரினால் புல்லும் முளைத்துவிட்டதாம். இவர்கள் தங்கள் பாவத்தை நினைத்துப் புலம்ப நாடினால் ஏழு நாள் வரையில் பட்டினியாகவே யிருப்பார்களாம்.

பகுதாது நகரத்தில் வாழ்ந்திருக்கும் முகியித்தின் அப்துல் காதிறு ஜைலானி (றலி) அவர்கள் ஒருநாள் தங்கள் அடிமையாட்களுள் ஒருவரை அழைத்து, பதாயிகு நகரத்திற்கு வெளியேயுள்ள வனத்தில் ஓரு விருட்சத்தின் கீழ் "அகுமதுல் கபீறு இப்போது உட்கார்ந்திருக்கின்றார். நீ அவரிடம் சென்று கடவுள்மீது வைக்கும் இஷ்கு (அன்பு) என்பது எத்தகையதெனக் கேட்டுவா" என்று அனுப்பினார்கள்.

அந்தத் தொண்டர் குறிப்பிட்ட வனத்திற்கு வந்தார். அங்கே ஒரு அடர்ந்த விருட்ச நிழலில் நாயகமவர்கள் தனித்து உட்கார்ந்திருக்கக் கண்டு சமீபித்து தம் கைகளைக் கட்டி அடிபணிந்து நின்று "யாசையிதீ! அல்லாகுத்த ஆலாவின் இஷ்கு எப்படியிருக்கும் என்பதை தெரிவிக்க வேண்டும்" எனக்கேட்டார்.

நாயகமவர்கள் அவரை ஏறிட்டுப்பார்த்து "அல்லாகுத்த ஆலாவின் இஷ்கு" அவன் இல்லாத மற்றவை அனைத்தையும் எரித்துவிடும்! அதுதான் அவனுடைய இஷ்கு. அதனை அவன்மீது பற்றுதலுள்ளோரே அறிவார். நிச்சயமாக நீ அந்த இஷ்கை அறிய விரும்புகின்றாயா? என்று சொல்லிவிட்டு "அல்லாவின் இஷ்கா" எனப்பேரேக்கமாக எங்கிப் பெருமூச்சு விட்டார்கள். அப்போது அப்பெருமூச்சிலிருந்து அக்கினி பறந்து நாயகமவர்களையும் அவர்களிருந்த விருட்சத்தையும் சூழ்ந்து பற்றிக்கொண்டு சுவாலித்து எரிந்தது. அவ்வக்கினிக்குள் நாயகமவர்கள் அகப்பட்டு விருட்சத்தோடு எரிந்துபோனார்கள். நாயகமவர்களின் திருமேனி வெந்த சாம்பலின் நடுவே மணிபோல் ஒரு வஸ்துவிருந்து இலங்கிக்கொண்டிருந்தது.

வந்தவர் இக்காட்சியைக் கண்டு வெருண்டு, விரைந் தோடிவந்து, குத்பு நாயகமவர்களிடம் நிகழ்ந்ததைச் சொன் னார். அவர்கள் அவரை நோக்கி "சையிது அகுமதுல் கபீறு எரிந்து இறந்து போனார் என்று நீ அஞ்சாதே!" கொஞ்சம் அத்தரும் பன்னீரும் எடுத்துக்கொண்டு போய் சாம்பலிற் கண்ட மணியின்மீது ஊற்றிவிட்டு நில் என் று கட்டளையிட்டார்கள். அவ்வாறே அவர் அத்தரும் பன்னீ ரும் கொணர்ந்து தாம் கண்ட வஸ்துவின்மீது தெளித்தார். தெளித்த நிமிஷத்திலேயே நாயகமவர்கள் மூன் பால் விருட்சத்தின் கீழ் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. அவர் கண்டவுடன் நெருங்கி, நாயகமவர்களின் திருவடிகளைத் தொட்டு முத்தமிட்டுப் பணிந்து நின்றார். நாயகமவர்கள் அவரை நோக்கி "ஏ! மனிதனே, அல்லாவுடைய இஷ்கைக் கண்டாயா? இதுதான் அவனுடைய இஷ்கு; அது இப்படித் தான் அவன் அல்லாததை எரித்துவிடும், எங்கள் நாயகமவர் களுக்கு என் சலாம் சொல்வாயாக; போ" என்று கூறி அவரை அனுப்பினார்கள். அவர் அங்கிருந்து குத்பு நாயகமவர்களிடத்து வந்து நிகழ்ந்ததைச்சொன்னார். அதற்கு அவர்கள் "சுல்தானுல் ஆரிபீன் நீ தெரிந்துகொண்டாயா! அவர்தாம் அந்த இஷ்கி (அன்பி)ல் நிரம்பினவர், இனி கௌதுல் அகுலமும், குத்புல் அக்தாபும் அவர்தாம்" என்று கூறினார்களாம்.

ஆகையால் ஆதியந்தப் பூவாகிய அன்பு மலரால் அர்ச் சிக்கும் பூசனைக்கு நிகரான மார்க்கம் எக்காலத்திலுமில்லை. ஆனால் அறியாக்காலத்தில் நம்பிச் செய்வதெல்லாம் பக்தி யென்றும், அறிந்து செய்வதெல்லாம் ஞானம் என்றும் சொல்லப்படும். பக்தியின் இரண்டு பிரிவுகளில், நாமரூபங் களால் அவரை வழிபடுவதை 'பக்தி' என்றும், உலகில் காட்டும் அன்பைக் 'கர்மம்' என்றும் சொல்வதும் உண்டு. ஞானத்தின் இரண்டு பிரிவுகளில், குருநாதன் காட்டிய கற்பனையற்ற வழியில் நடப்பதை 'யோகம்' என்றும், அவ் வழியின் முடிவை 'ஞானம்' என்றும் சொல்வதும் உண்டு. ஒரு பொருளைக் காணுமலிருந்தும், அதை முதலில் நம்புவ

தும், பிறகு அதைக் காண்பதும் உலக இயல்பு. அப்படி நம்பாதவர் அதைக் காண்பது எப்போதும் இல்லை. ஆகையால், நம்புகிறவர்களுக்கு ஒருகாலம் இல்லாவிட்டாலும் ஒருகாலம் உண்டு. நம்பாதவர்களுக்கு ஒருகாலத்தும் இல்லை. இந்தத் தெய்வ நம்பிக்கையில் தீமையில்லை என்ற ஒன்றைக் கொண்டாவது நம்பு. நீ நம்பிச் செய்வதெல்லாம் அன்பு வழியேயாகும். நீ அந்த அன்பு வழியில் திடமாக நடந்தால் அன்பென்றும், சிவமென்றும், நீயென்றும் கூறப்பெறுனின்ற திரிபுடியற்று அன்பு மயமாகவே யாவாய்.

அன்பே சிவம்! அன்பே கடவுள்!
எல்லாம் அன்பே!

---

(முகவுரை - 4-ம் பக்கத் தொடர்ச்சி.)

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாஞ்
சொல்லிய வண்ணம் செயல்—(குறள்.)

11. எல்லாவற்றிலும் அடங்காதது எது? அது "மனம்" ஏனெனில் "சிந்தையை அடக்கியே சும்மாவிருக்கின்ற திறமரிது" (தாயுமானார்) 'மனக்குரங்கை கட்டிவைத்தாலும் காட்டும் பல்லை' என்றனர் (குணக்குடியார்)

12. எல்லாவற்றிலும் அவசியம் அறியவேண்டியது எது? "தன்னை" ஏனெனில் "தன்னையறிந்தவனே தலைவனையறிவான்" 'தன்னை யறிந்தருளே தாரகமாய் நிற்பதுவே யுன்னையறிதற் குபாயம்" (தாயுமானார்)

13. எல்லாவற்றிலும் அருமையானது எது? அது "காலம்" ஏனெனில் 'காலம் அருமையா? பணம் அருமையா?' என்றபோது எதை அருமை என்று சொல்லுவோம். காலத்தை யல்லவா? அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வருமா?

14. எல்லாவற்றிலும் அவசியம் விடவேண்டியது எது? அது "ஆசை" ஏனெனில் "ஆசையறுதல் வீட்டின்பம் நேரே அடையக் காரணமாம்" (பிரபுலிங்கலீலை.) ஆசை நீக்கத்தாலேயே மோட்சம் எற்படுகிறது.

தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்.—(குறள்)

14477



A. No. .....

15. எல்லாவற்றிலும் சிறந்த நிலை எது? அது "மௌனம்" எனெனில், பிரசங்கங்களுக்கோ கூடுதல் குறைவு என்னும் நிந்தை உண்டு, மௌனத்திற்கோ அஃதில்லை. மௌனம்களுக்கு காசமல்லவா? மௌனம் மலையைச் சார்ந்திருக்கும்.

16. எல்லாவற்றிலும் அரிய செய்கை எது? அது "சும்மா இருத்தல்" எனெனில், ஒரு காரியத்தையும் நினையாமல் சும்மா இருப்பது எவர்க்கும் அருமை. "சும்மாவிருக்கின்ற திறமரிது, சும்மா இருக்கச் சுகம் சுகம்" (தாயுமானார்)

---

## ஸ்ரீகுரு கருணையானந்த ஞானபூபதிகள்
### சீட்கோடிகளில் ஒருவராகிய
### கருணை. சோமசுந்தர பூபதிகள் இயற்றிய
# ஆனந்த கீதங்கள்.

(சிதாம்பிகை காந்தி என்ற மெட்டு.)
இராகம்—பியாக் தாளம்— ஆதி.

பல்லவி.

பாருங் குரு நாதா — சிறு
பாலன் பணி பாதா — சதா கண் (பா)

சரணநுபல்லவி.

1 தீருஞ் சனனஞ் சதியே
தெய்வீக கருணை நிதியே
ஆருங்கா ணாவார் பதியே

அடியவ னடைந்து னருளடி புகழ்ந்து
படிதன்ன மறந்து பதமுற மகிழ்ந்து (பா)

2 கருணையா னந்த யோகா
கலாமிர்தம் உண்ணும் போகா
பிரணவா னந்த தேகா

பிரியங் கெடாது விரியும் ப்ரகாச
துரியங் குரைவி வருமங் களாகண் (பா)

3 மங்கா நிவாத தீபா
மதாதீத சமரச ரூபா
துங்கா செகப்ர தாபா
சோமசுந்தரன்மொழி பாமணந் திகழடி
யேமுடி யணிந்திட வேமனந் தயவொடு (பா)

---

(தர்ம சவர்த்தன காளிங்க நிர்த்தனே என்ற மெட்டு.)
இராகம்—கல்யாணி தாளம்—ஆதி.

பல்லவி.

தென்கமலாபுரி தங்குங் குருபர
தேவ கருணை யானந்தா (தென்)

சரணதுபல்லவி.

1 வன்கர ணம்பொறி வன்பு கெடுப்படி
மந்த்ர மொழிந்திடு மாதவனே
மாட்சிமை தங்கப ரோட்சமொ டெங்கணும்
வாழு மோன ஆதவனே (தென்)

2 அந்த நிறைத்தொளி ருங்கரு ணைகர
அத்வித சற்குரு வாரியே
ஆட்சிசெய் துரிய மாட்சிமை தந்தெனை
யாளு வாய்கிரு பாநிதியே (தென்)

3 திங்க ளிரங்கழு தந்தின முண்டு
திடங்கொடு சண்டனை வென்றவனே
தீட்சை புரிந்து கடாட்சமுந் தந்தருள்
திருமறை முடி நின்றவனே (தென்)

4 சுந்தரங் கொண்ட பசுந்தமிழ்ச் சோம
சுந்தரன் போற்று சிதம்பரனே
சூட்சும வாசலின் காட்சி யருளிய
சோதி யே சுயம்பரனே (தென்)

---

கருணாநிதி (பில்டிங்ஸ்) பிரஸ்–விஜயபுரம் 33 gvmy.

# நூறு (100) நூறு ரூபாய்கள்

எத்தனையோ நூறு ரூபாய்களை சில.....விஷயங்களில் செலவிட்டிருப்பீர்கள்; இன்னும் சில்லரை சில்லரையாக எத்தனையோ ரூபாய்களை செலவிட்டு விட்டீர்கள்.; அவை களை மாயமாய் மறைந்து போயிற்று. எத்தனையோ நூறு ரூபாய்களை சில தான தருமங்கள் கொடுத்திருப்பீர்கள்; அவைகளுக்கு ஓர் ரூபமேயில்லை. ஆனால், ஒவ்வொரு **3** ரூபாயில் ஒவ்வொரு புதையலை யெடுத்துப் பெரிய செல் வத்தை யடையலாம். அது எப்படி?

**ஞானபூபதிகள்** திருவாய்மலர்ந்தருளிய விலைமதிக்க முடியாத மாணிக்கப் புதையலாகிய **வேதாந்த பாஸ்கரன்**, **ஞானக் களஞ்சியம்**, **ஞானயோக ரகசியம்** என் னும் மூன்று புத்தகங்களும் மூன்று புதையல்களாம்.

பரமரகசியம்! பரமரகசியம்! என்று மகான்கள் வெளி யிடாமல் மறைத்து வைத்திருந்த ஞானப்புதையல்களை இருபாலரும் தெரியும்படி இனிய வசன நடையில் மிக்க வெளிப்படையாக எழுதப்பெற்றிருக்கிறது. இந்நூற்களில் அனுவசியமான அடைமொழிகள் ஆசைக்குக்கூடக் காண்ப தரிது. எல்லாம் உபதேசம்! எல்லாம் அப்பியாசம்! எல் லாம் யோகம்! எல்லாம் ஞானம்! இத்தகைய நூலை மேல் நாட்டில் வெளியிட்டிருந்தால் பவன் மாரி பொழிந் தனைக்கு! உனக்கு! என்று வாங்கிக் கண்ணில் ஒத்திக்கொள் வார்கள். நமது தமிழ் நாட்டில் சர்வமத சகோதரர்களாகிய ஆண்பெண் இருபாலரும் வாசிக்கும்படி சொற்ப விலையில் வெளிவந்து உலாவுவதானது இந்திய மக்களின் பெரும் பாக்கியமேயாகும். முதற்பதிப்பிலுள்ள அரிய விஷயங்களை மணி மணியாகத் திருத்தியும், விளக்கியும், விட்டுப்போன அரிய உபதேசங்களையும், ஞானப் புதையல்களையும் இப் பதிப்பில் அற்புதம்! ஆனந்தம்! என்று கண்களில் ஒத்திக் கொள்ளும்படி எழுதப்பெற்ற (ஏராளமான அப்பியாசப் படங்களுடன்கூடிய) புத்தகங்கள் கிரௌஸ் கடதாசி 600 பக்கம் சர்மை காலிக்கோ பைண்டு தனித்தனி விலை ரூபாய் **3–0–0.**

மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும்
அவசியம் வாசிக்கவேண்டிய

# மாணிக்கப் புதையல்கள்

திருவாரூர்–மஹான் ஸ்ரீ குரு
கருணையானந்த ஞானபூபதிகள்
திருவாய் மலர்ந்தருளியவை

**வேதாந்த பாஸ்கரன்**

விளக்கமான (இரண்டாம் பதிப்பு) 3—0—0

**ஞானக் களஞ்சியம்**

திருத்தமான (இரண்டாம் பதிப்பு) 3—0—0

**ஞான யோக ரகசியம்**

நூற்றுக்கணக்கான படங்களுடன் 3—0—0

மேற்கூறிய மூன்று புத்தகங்களும் ஏராளமான அப்பியாச
ஆப்டோன் படங்களுடன் கண்ணைக்கவரும் அழகான சீர்மை
பட்டுக் காலிக்கோ பைண்டு செய்யப்பெற்றுள்ளது.

| | |
|---|---|
| அன்பே கடவுள் | 0—6—0 |
| சர்வமத சிவகாருண்யம் | 0—6—0 |
| அஷ்டாங்க யோகம் (படங்களுடன்) | 0—4—0 |
| நூஹூல் இஸ்லாம் | 0—6—0 |

*இன்னும் பலவித கீர்த்தனை புஸ்தகங்களும் கிடைக்கும்.*

**எம். ஏ. நாவலர் அண்டு சன்ஸ்,**
விஜயபுரம்–திருவாரூர்,
தஞ்சாவூர் ஜில்லா.